# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 25 புதன்கிழமை (08-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:88


### போர்க்கைதிகள் விடுவிப்பு விவகாரம்

# வன்னியிலும் கொழும்பிலும் ஏககாலத்தில் உண்ணாவிரதம்

## சனியன்று ஆரம்பம்

வவுனியா, மார்ச் 8

**விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பதினொரு யுத்தக்கைதிகளும் தம்மை விடுவிக்கக் கோரி புதுக்குடியிருப்பில் எதிர்வரும் சனிக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளனர்.**

**அதேவேளை யுத்தக் கைதிகளின் பெற்றோர்கள் அன்றைய தினம் கொழும்பில் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளனர்.**

விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள யுத்தக் கைதிகள் முன்னர் புதுக்குடியிருப்பில் 15தினங்கள் மேற்கொண்டுவந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தனர். அவர்களைப் பார்வையிட புதுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டைக் கடலில் 3மணிநேரம் கடற்சமர்!

### திங்கள் நள்ளிரவு சம்பவம்

கொழும்பு, மார்ச் 8

**திருமலைக்கும் - புல்மோட்டைக்கும் இடைப்பட்ட கிழக்குக் கடற்பரப்பில் திங்கள் நள்ளிரவு சுமார் மூன்று மணி நேரம் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே உக்கிரக் கடற்சமர் இடம்பெற்றிருக்கிறது.**

முல்லைத்தீவில் இருந்து புல்மோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் நான்கு படகுகளைக் கண்ட கடற்படையினர் அவற்றின் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் வெடித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மலசலகூடக் குழிக்குள் 8 மனித எலும்புக்கூடுகள்!

### கிளிநொச்சி உதயநகரில் மீட்பு

வவுனியா,மார்ச் 8

கிளிநொச்சி மாவட்டம் - உதயநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மலசலகூடக்குழியில் இருந்து நேற்றுமுன்தினம் 8 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

வீடு ஒன்றைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களே மலசலகூடக்குழியில் இருந்து இந்த எலும்புக்கூடுகளையும், ஆபரணங்கள் சிலவற்றையும் மீட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை உதயநகர்ப்பகுதி முன்னர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் தமது வீடுகளைப் பார்க்கச் சென்று பின்னர் காணாமற் போயிருந்தோரின் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அக்கராயன் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வன்னித் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-7)

### எரிபொருள் விலை உயர்வை ஆட்சேபித்து

## மாகாணசபைக் கூட்டத்துக்கு வண்டிலில் வந்த உறுப்பினர்!

### தாக்கப்பட்டு படுகாயம்

கொழும்பு,மார்ச் 8

மண்ணெண்ணெய் மற்றும் டீசல் விலைகள் அதிகரிக்கப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் மாட்டுவண்டியில் மாகாணசபை கூட்டத்துக்குச் சென்ற வடமேல் மாகாணசபை ஐ. தே.க. உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை குருநாகல் நகரமண்டபத்துக்கு அருகில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' - 'சஞ்சீவி' இப்போது இன்ரநெற்றில்!

'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளில் பிரசுரமாகும் செய்திகள், தகவல்கள், அறிவித்தல்களை அன்றையதினம் அதிகாலையிலேயே உலகின் எந்த மூலையில் இருந்தும் வாசிக்கக்கூடியதாக அவை 'இன்ரநெற்'றில் பிரசுரமாகத் தொடங்கியுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

முக்கிய செய்திகள், கட்டுரைகள், கோயில் உற்சவங்கள், விழாக்கள் போன்றவை தொடர்பான தகவல்கள், படங்கள், மரண அறிவித்தல்கள் ஆகியவை அன்றன்றே கட்டணம் ஏதுமின்றி - இலவசமாக - சர்வதேச வலைப்பின்னல் வழியாக - உதயன் இணையத்தில் தமிழ்மொழி மூலம் பிரசுரமாகின்றன.

நம்மூர்ச் செய்திகள், அறிவித்தல்களை உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் தெரியப்படுத்தும் வசதியை ஏற்படுத்துவதில் மகிழ்வடையும் உதயன், தமது நெருங்கியவர்களின் பிரிவால் துயருறும் நமது மக்களுக்கு பயன்தரும் மற்றொரு சேவையையும் இலவசமாக வழங்குகின்றான்.

உதயனில் பிரசுரமாகும் மரண அறிவித்தல்கள், மேலதிக கட்டணம் ஏதுமின்றி தவறாது இன்ரநெற்றில் இடம்பெறும். அதைப்பார்த்து வெளிநாட்டில் அல்லது வெளியூரில் உள்ள நண்பர்கள், உறவினர்கள், அந்தப் பிரசுரத்தில் இடம்பெற்றிருக்கும் 'ஈ-மெயில்' மூலம் அனுப்பி வைக்கும் அனுதாபச் செய்திகள் இங்கு உதயன் அலுவலகத்தில் "பிரிண்ட்" எடுக்கப்பட்டு, மரண அறிவித்தல்களைப் பிரசுரித்த தகவலாளர்களுக்கு உடனுக்குடன் சேர்ப்பிக்கப்படும்.

கடந்த வாரம் 'உதயன்' இன்ரநெற் சேவை உத்தியோகபூர்வமாக இயங்கத் தொடங்கிய பின்னர் பிரசுரமான மரண அறிவித்தல்கள் சார்பாக இதுவரை வெளிநாடுகளில் இருந்து பெறப்பட்ட ஒருதொகை அனுதாபச் செய்திகள் தற்போது சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

உதயன் இணையத்துடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கான 'வெப்' தள முகவரி:- **www.uthayan.com**

\- நிர்வாகம்.

# குருநகர் கடலில் மீனவர் மீது சீருடையினர் நேற்றுத் தாக்குதல்!

### அனுமதிக்கப்பட்ட கடற்பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச் 8

யாழ். குடாக்கடலில் குருநகரை அண்டிய பகுதியில் நேற்று முற்பகல் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

· கடற்றொழில் செய்வதற்கு கடலில் கொடிகள் நடப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்த பிரதேசத்தில் மூன்று படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த பத்து மீனவர்களே விசைப்படகில் வந்த கடற்படையினரால் தாக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

காலை 10.30மணியளவில் அப்பகுதிக்கு வந்த சீருடையினர் "இப்பொழுது நேரம் என்ன தெரியுமா?" என்று கேட்டு மீனவர்களைத் தாக்கியதோடு, அவர்கள் பிடித்துவைத்திருந்த மீன்வகைகளையும் பறிமுதல் செய்துகொண்டு சென்றதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் குறித்து சம்பந்தப்பட்ட மீனவர்கள் கரை திரும்பியதும் குருநகரில் உள்ள படை அதிகாரியிடம் முறைப்பாடு செய்தனர். 'செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளும் தாக்குதலுக்குள்ளான மீனவர்களைச் சந்தித்து விவரங்களைக் கேட்டறிந்தனர். (ஐ-5)

### தடை உத்தரவு நீடிப்பு

சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். அணி செயற்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத்தடை உத்தரவு இம்மாதம் 20ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியினரின் செயற்பாடுகளுக்குத் தடைவிதிக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே. (ஐ-7)

### மீனவர் தாக்கப்பட்ட விடயம்:

## நாடாளுமன்றில் இன்று ஈ.பி.டி.பி. குரல் எழுப்பும்!

யாழ்ப்பாணம்,மார்ச் 8

குருநகர் கடற்பகுதியில் நேற்று மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இன்று நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்தும் - புங்குடுதீவில் இளம்பெண் சாரதாம்பாள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டது குறித்து ஈ.பி.டி.பி. குரல் எழுப்பி அந்த சம்பவத்தை அம்பலப்படுத்தியதை அடுத்து தீவகத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கு எதிராகக் கடற்படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடி நடவடிக்கைகள் குறித்தும் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தி. மாணவர் இருவரைக் காணோம்

யாழ்ப்பாணம்,மார்ச் 8

யாழ் மத்திய கல்லூரி மாணவர்களான அலன் ரஜீவ் (வயது18), கந்தசாமி இந்திரகரன்(வயது19) மற்றும் கொழும்புத்துறையைச் சேர்ந்த தி.சிவராஜன் (வயது30) ஆகியோரை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணவில்லை என்று அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3-17)

## பிரிட்டிஷ் அதிகாரி வருகிறார்

கொழும்பு,மார்ச் 8

பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான வில்லியம் ஹேக் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் வரும் அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வுமுயற்சிகள் தொடர்பாகப் பலருடன் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## முப்படையினரின் நலன்களைக் கவனிக்கக் குழு

கொழும்பு,மார்ச் 8

முப்படையினர் மற்றும் பொலிஸாரின் தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பட்டியலிடுவதற்காக 4 பேரைக் கொண்ட விசேட குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

நேற்றுமுதல் செயற்படும் வகையில் நியமனம் செய்யப்பட்ட இந்தக் குழுவில் அமைச்சர்களான தர்மசிறி சேனநாயக்க, மைத்திரிபால சிறிசேன, ஜோண் செனிவிரட்ண ஆகியோரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் (அல்லது அவரது பிரதிநிதியும்) இடம்பெற்றுள்ளனர்.

இந்தக்குழுவினர் இன்று புதன்கிழமை முதல் இரண்டு மாதங்களுக்குள் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் தொழில்பிரச்சினை, சேமநலன் ஆகியன குறித்த தகவல்களைச் சேகரித்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பர். (ஐ-7)

# மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 8

வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டிலான சர்வதேச மகளிர் தினவிழா இன்று காலை 9மணி முதல் வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி.ப.திலகநாயகம் போல் தலைமையில் செயலக அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

"பெண்களின் சமத்துவம் நிறை

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் காயம்

கடமையிலிருந்த சிப்பாயின் கிரனேட் தவறி வீழ்ந்து வெடித்ததில் சிப்பாய் படுகாயமடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றதாக தெரியவருகிறது.(ஐ-117)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பிறப்பு 14 - 07 - 1953

இறப்பு 24 - 01 - 2000

அமரர் கந்தையா குணசேகரம்

திதி 08-03-2000

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய் - இருந்து
கண்ணென எம்மைக் காத்த - அப்பா!
கணப்பொழுதில் எம்மை கதிகலங்க வைத்தீர்களே
பாரினில் போகும் வழி தெரியாமல்
பரிதவித்து நிற்கின்றோம் - அப்பா!

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தபால் மூலமாகவும் ரெலிபோன் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் இரங்கல் உரை வழங்கியோருக்கும் மலர்வளையம் சாத்தியோருக்கும் எமக்கு எல்லாவித உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

161. A.V. றோட்.
அரியாலை.

*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*


(74265)


லிபேட்டி
அச்சுவேலி
நாளை மட்டும்
அரிய சந்தர்ப்பத்தைத்
தவறவிடாதீர்கள்!
இரத்தக் கண்ணீர்
காட்சிகள் - 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
(74112)

ராஜா
யாழ்ப்பாணம்
அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
இன்றுமட்டும் 3 காட்சிகள்
சரத்குமார், தேவயானி
நடித்த
சூர்யவம்சம்
(காட்சிகள் 9.00, 2.00, 5.00)
நாளைமுதல்
குதூகல ஆரம்பம்
படையப்பா
(C/11282)

நாகம்ஸ்
சுன்னாகம்
அஜித், சிம்ரன்
நடித்த
அவள் வருவாளா?
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11282)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13 - 04 - 1949

உதிர்வு 19 - 02 - 1999

அமரர்

**கனகரட்ணம் முருகேசு**

(அம்பாள் பார்மஸி அன்ட் குறோசறி)

**திதி : 08.03.2000**

ஆண்டு ஒன்று சென்றாலும் அன்பு முகம்
மறந்திடுமோ? அரவணைத்தே எம்மை
விட்டு சென்ற மாயமென்ன!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்*

*இராசதோப்பு வீதி,*
*சாவகச்சேரி.*

(c/11339)

~ குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் இந்திரன் ஹாட்வெயர்ஸ் உரிமையாளருமாகிய

**திரு. வைத்திலிங்கம் பழனித்துரை**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று அதிர்ச்சியும், துயரமும் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.27, நவீனசந்தை
(மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

*யாழ்ப்பாணம் வணிகர் கழகம்*

(C/11338)

## கண்ணீர் அஞ்சலி

எமது வெதுப்பகத்தில் பணியாற்றியவரும்
மீசாலை கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்தவருமாகிய

**சிவலோகநாதன் தர்மகாந்த்**

அவர்களின் அகாலமரணம் எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரது பிரிவால் கலங்கிநிற்கும் அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்

யூனியன் பேக்கரி.
சாவகச்சேரி.

(C/11134)


KOBE

நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?

உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.

உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

கவலை வேண்டாம்!

இப்போது!

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya June, Colombo - 4
Tel: 589992

'KOBE தரத்தின் சின்னம்'

(C/10933)


## மரண அறிவித்தல்கள்

### காங்கேயன் ஆனந்தகுமாரசுவாமி

(பாதுகாப்பு உத்தியோகத்தர் - இலங்கை வங்கி)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேயன் ஆனந்தகுமாரசுவாமி நேற்று (07-03-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காங்கேயன் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், லோஜனியின் அன்புக் கணவரும் சிறீஜனனி, சிறீஜனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்பிட்டி

(74283)

தகவல்
ஆ. சிறீஜனன்
(மகன்)

### சிதம்பரப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

உசன் தெற்கு மிருசுவிலைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை தாமோதரம்பிள்ளை 05.03.2000 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் பாறுபதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் புஸ்பலதா (ஆசிரியர், உசன் இராமநாதன் கல்லூரி), பிறேமலதா(கூட்டுறவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்), திருவருட்செல்வன்(பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், அம்பாறை), திருக்குமரன்(மாணவன், உசன் இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சற்குணநாதன் (லண்டன்), சண்முகம்(கல்வி உத்தியோகத்தர், ப.நோ.கூ.சங்கம், கொடிகாமம்) திரிபுரசுந்தரி (ஆசிரியர், அம்பாறை) ஆகியோரின் அன்பு மாமனாரும் கணபதிப்பிள்ளை(உப அதிபர், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), தவமணி ஆகியோரின் சகோதரரும் சங்கீதன், சஜிதா, பிரசாந் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2000) புதன்கிழமை பிறபகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன் தெற்கு,
மிருசுவில்.

(74273)

தகவல்:
சு.சண்முகம்
(மருமகன்)

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடு நடத்துவதற்கு அனுமதிக்குக

## நெடுந்தீவுப் பங்குத் தந்தை கோரிக்கை

நெடுந்தீவு, மார்ச் 8

ஏப்ரல் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலியும் வழிபாடும் நடத்த அனுமதி பெற்றுத் தரும்படி ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பங்குத்தந்தை மொன்வெட் அடிகள், ஆலய மூப்பனார் டபிள்யூ அரிய நாயகம் மற்றும் இங்குள்ள கத்தோலிக்க தேவாலயங்களின் பிரதிநிதிகள் கொண்ட குழு டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்படி கோரிக்கையை விடுத்தது

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் 1982 ஆம் ஆண்டு முதல் திருப்பலிப் பூசைகள் நடைபெறவில்லை என்றும் —

1988 இல் இந்திய அமைதிப் படையின் அனுமதியுடன் ஒரு நாள் வழிபாடு நடத்தப்பட்டதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியுடனும் உரிய அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுத் தருவதாக டக்ளஸ் தேவானந்தா பதில் அளித்துள்ளார்.

இதேவேளை இம்முறையும் நெடுந்தீவு அந்தோனியார் ஆலயத்திலேயே கச்சதீவு உற்சவத்தை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கமும் பார்க்க)

# குமுதினி சேவையை திங்களன்று ஆரம்பிக்க முடியவில்லை

## பரீட்சார்த்த ஓட்டத்தில் முக்கிய பாகம் உடைவு

யாழ்ப்பாணம், மார்ச் 8

ஊர்காவற்றுறைக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான 'குமுதினி' படகுச்சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் படகின் திருத்த வேலைகள் பூர்த்தியாகிக் கடந்த திங்கட்கிழமை சேவையை ஆரம்பிக்க முடிவாகி இருந்தது.

எனினும் பரீட்சார்த்த ஓட்டத்தின்போது அதன் முக்கிய பாகம் உடைந்து விட்டது என்றும் —

அந்தப் பாகம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு பொருத்தப்பட்ட பின்பே மீண்டும் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ- 3-111(

## சிரமம்

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 8

வழமையான மின்தடை காரணமாக சிவராத்திரி தினமன்று இரவு புன்னாலைக் கட்டுவன் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

(இ–133)

# பலநாட்டு அறிஞர்களும் படிக்கும் நூலாக திருக்குறள்

## பேராசிரியர் சண்முகதாஸ் உரை

நல்லூர், மார்ச் 8

பைபிள் ஐந்நூறு மொழிகளிலும் குர்ஆன் முந்நூறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவை சமய நூல்கள். உலகத்தில் ஓர் இலக்கிய நூல் நூறுக்கும் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்றால் அது திருக்குறள் மட்டுமே. பலநாட்டு அறிஞர்களும் படிக்கும் நூலாக அது விளங்குகிறது

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவிலும் பரிசளிப்பிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் கூறினார்.

கல்லூரி அதிபர் வி. பாலசுசும் [illegible] தலைமையில் நடைபெற்ற விழாவில் பேராசிரியர் சண்முகதாஸ் மேலும் பேசும்போது கூறியதாவது;

போப்பையர் முதன்முதலில் திருக்குறளை மொழிபெயர்த்தபோது இதை ஏன் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கிறீர்கள்? என்றுபலரும் கேட்டார்கள்.

கீழைத்தேச மக்களின் ஆன்மீக சிந்தனை. உலகந்தழுவிய நோக்கங்கள், உண்மை அன்பு ஆகியவற்றை அறிய திருக்குறள், திருவாசகம் ஆகிய நூல்களைப் படித்தல் அவசியம் என்பதைப் பின்னர் அவர்கள் உணர்ந்தார்கள்.

எமது இலக்கியத்தில் உலகத்தைப் பாடும் மரபுஉண்டு. வள்ளுவரும் தனது முதலாவது குறளில் அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு என்கிறான். உலகம் என்ற சிந்தனை அவன் மனத்தில் இருக்கிறது.

திருக்குறளில் கூறாத கருத்துக்கள் சம்பவங்கள் எதுவுமே இல்லை. சென்னைப்பல்கலைக்கழகத்தில் திருக்குறளுக்கு என்று ஒரு பீடமே உண்டு.

இரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்தபுலவன் பாரதி, கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் சிறந்த கவிஞனைக் காணவில்லை என்று கூறினான் அவன். வள்ளுவன் தன்னை உலகினுக்கேதந்து என்ற பாடலின் மூலம் உலகத்துக்குரிய கவிஞனைத் தந்தது எமது மொழியென இறுமாப்புடன் கூறுகிறான்.

தமிழர்களாகிய நாங்கள் அவனது திருக்குறளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். எமது நாட்டைப் பொறுத்தவரை கற்றவர்கள் அதனை ஏனையோரும் கற்க ஊக்குவித்தல் வேண்டும்.

### வாழ்க்கையோடு இணைந்தது

கனகரத்தினம் மகாவித்தியாலயம் இந்தப்பணியை முன்னெடுத்து பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது பாராட்டப்பட [illegible] அடியது. எமது வாழ்க்கையோடு இணைந்துள்ள இலக்கியம் திருக்குறள். மாணவர்கள் அதில் காணப்படும் 1330 குறள்களையும் மனனம் செய்தல் வேண்டும் — என்றார்.

கல்லூரி முதல்வர் மாணிக்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது :—

திருக்குறள் சிந்தனைகள் நம் ஒவ்வொருவர் மனதிலும் பதிந்திருந்தால் சிறந்த மனிதர்களாக நாம் வாழ முடியும். அது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இன்று வெளிநாட்டவர்களே திருக்குறளைப் படிக்கும் நிலை இருக்கும்போது நமது இலக்கியமான அதனை நாம் அறியாமல் இருப்பது கவலைக்குரியது.

இன்றைய இளம் தலைமுறை தமது எதிர்காலத்தில் நற்பிரசைகளாக வாழ குறளின் ஒவ்வோர் அங்கமும் வழிகாட்டுகிறது என்பதைச் சிந்தித்து அதனைக் கற்பதில் அக்கறைகொள்ளவேண்டும்.

இன்று எமது பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் பேராசிரியர் சண்முகதாஸ் சிறிய வயதில் திருக்குறள் மனனப் போட்டியில் பரிசாக திருக்குறள் நூல் கிடைத்தது என மிகவும் மகிழ்ச்சியுடன் கூறினார். நீங்கள் அதனை மனதில் பதித்து இது போன்ற போட்டிகளில் கலந்து பரிசு பெறவேண்டும் என்ற முனைப்புடன் திருக்குறளைப் படிக்க வேண்டும் — என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டவர்த்தகர் கங்கைவேணியன் பேசும்போது—

நான் திருக்குறளை முழு அளவில் படிக்கவில்லையே என்பதில் கவலை கொண்டுள்ளேன். இருந்தும் குறள்வாயிலாக வெளிப்படும் வாழ்க்கை முறைகள் குறித்த அனுபவங்களை ஓரளவு பெற்றிருக்கிறேன். பணத்தை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும் என வள்ளுவர் கூறுகிறார். வர்த்தகர்கள் தாம் வைத்திருக்கும் பணத்தில் இருபத்தி ஐந்து வீதத்தையாவது நல்ல காரியங்களுக்குச் செலவிட வேண்டும். நாங்கள் எத்தனையோ இடர்களைச் சந்தித்தாலும் குறள் வழி நடந்தால் எமக்கு எந்தத் துன்பமும் அணுகாது — என்றார்.

மதுரகவி காரை. எம். பி. அருளானந்தம் பேசும்போது, மாணவர்களிடையே திருக்குறளைப் படிக்கும் ஆர்வம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே இந்தப் போட்டிகளை நடத்தினோம். அடுத்துவரும் சித்திரை மாதத்துக்கிடையில் கணிசமான மாணவர்கள் 1330 குறள்களையும் மனனம் செய்து அவர்களுக்கு; பேராசிரியர் சண்முகதாஸ் மூலம் பரிசில்களை வழங்க ஏற்பாடுகள் செய்வோம் — என்றார்.

திருக்குறள் மனனப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற செல்வி ஜெயமலர் பத்மநாதன் பேராசிரியர் சண்முகதாஸிடம், இருந்து தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (இ-103)

# மன்னாரில் கைதானவர்கள் தொடர்ந்து தடுத்து வைப்பு

வவுனியா, மார்ச் 8

மன்னாரில் கடந்த இரு மாதங்களில் படையினரால் கைது செய்யப்பட்ட ஏழு பேரும் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

செபஸ்ரியன் யூடிக் ராஜா (வட்டக்கண்டல்), துரைராஜா ஆனந்தராஜா (பள்ளமடு), புவனேஸ்வரம் சுந்தரம் சூரியமூர்த்தி (காரைநகர்), எட்வேட் கொலம்பஸ் (சிலாவத்துறை), குணரஞ்சன் பிரதீபன் (உப்புக்குளம்), ரப்பியற்பிள்ளை அந்தோனி ஜெகதீபன் (முருங்கன்), தம்பிராஜா லோகநாதன் (வெள்ளாங்குளம்) ஆகியோரே படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

(இ–8)

## வாசகர் திருமுகம்

# கண்டும் காணாத மாதிரி நடந்து கொள்வது ஏன்?

நான் யாழ். நகருக்கும் வேலணைக்குமிடையே அடிக்கடி பஸ்ஸில் பிரயாணம் செய்பவன். அநேகமாக காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் (சாட்டி — மண்கும்பான் ஊடாக) ஊர்காவற்றுறை பஸ்ஸில் நான் பயணம் செய்வேன்.

இந்த பஸ் அல்லைப்பிட்டியைத் தாண்டியதும், மண்கும்பான் கடற்படை முகாமில் இருந்து வீதிப் பரிசோதனைக்கு அல்லைப்பிட்டி வரை வரும் கடற்படையினர், முழுமையான ஆயுதபாணிகளாக, பஸ்ஸில் ஏறி மண்கும்பானில் இறங்குகின்றார்கள். மண்கும்பான் பிள்ளையார் கோயில் கடற்படை முகாமுக்கு இரவுக் காவலுக்கு மேலதிகமாக தினமும் அனுப்பப்படும் வேலணை பிரதான கடற்படை முகாமைச் சேர்ந்த பத்துக்கும் அதிகமான கடற்படையினர் தங்கள் முழு ஆயுதங்களுடன் இந்த பஸ்ஸில் ஏறி வேலணை மட்டும் பிரயாணம் செய்கிறார்கள். இதை விட மண்கும்பான் முகாமைச் சேர்ந்த வேறு கடற்படையினர் இதே பஸ்ஸில் ஏறி காலைக் கடன்களைக் கழிக்கும் பொருட்டும், குளிப்பதற்கும் சிறிது தூரத்திலுள்ள கிணற்றடிக்குப் பிரயாணம் செய்கிறார்கள்.

இவர்களிடம் பயணச்சீட்டுக்கு பணம் அறவிடப்படுவதோ அல்லது இவர்களுக்குப் பயணச்சீட்டு வழங்கப்படுவதோ கிடையாது. மேலும் இவர்களின் பயணத்தால் பல இடங்களில் ''கொஞ்சம் நில்லுங்கள் ஒரு ஆள் வரவேண்டும்'' என பஸ்ஸை நிறுத்தி வைத்திருப்பதால் பயண நேரம் நீடிக்கிறது. இவர்கள் இருக்க பொதுமக்கள் நிற்க வேண்டியுள்ளது. மிதி பலகையில் இருவரோ மூவரோ நிற்பதால் மக்கள் ஏற இறங்க முடியாது மிகக் கஷ்டப்படுகிறார்கள்.

இவர்களுடைய ஆயுதங்கள் தரும் தொல்லையோ அனைத்திலும் அதிகம். இந்த அசௌகரியங்களோடு மிகவும் பயங்கரமான விடயம் என்னவென்றால் இவர்கள் ஆயுதங்களைக் கவனக் குறைவாக வைத்திருப்பதோடு கதைகளில் கவனமாக இருக்கிறார்கள். ஆயுதங்கள் தற்செயலாக வெடித்தால் பயணஞ் செய்யும் பயணிகளின் நிலை என்ன? மக்களை யார் காப்பாற்றுவது? இந்த பஸ்ஸில் ஏறுவதற்காக வீதிப்பரிசோதனையை அரைகுறையாக நிறுத்துவது அல்லது பஸ்ஸைக் காக்க வைப்பது என்பவையெல்லாம் எந்த வகையில் நீதியானதும் சட்டபூர்வமானதுமாகும்? இவையெல்லாம் தலைமைப் பீடத்துக்குத் தெரியாதா? அல்லது கண்டும் காணாதமாதிரி இருக்கிறார்களா? இனியாவது அவர்கள் கவனிப்பார்களா?

ஒரு பஸ் பயணி

வேலணை.

# தபால் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா?

யாழ். மாவட்டத்தில் மிகவும் அத்தியாவசிய சேவையாகிய தபால் விநியோகம் பலரும் போற்றத்தக்க வகையில் நடைபெறுகிறது. ஆனால், தந்தி கடுகதித் தபால்கள் அதற்குரிய கட்டணம் அறவிடப்பட்டும் சாதாரண தபால்கள் போன்றே விநியோகிக்கப்படுகின்றன. இந்த நிலைமை யாழ். மாவட்டத்தில் மட்டும் தான் உள்ளது. இந்நிலைமைக்கான காரணம் யாது?

மக்கள் தமது அவசர தேவை காரணமாகவே தந்தி, கடுகதித் தபால் சேவையைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், சாதாரண தபால் சேவகர் மூலம் காலதாமதமாகவே உரியவர்களுக்கு இவை விநியோகிக்கப்படுகின்றன. அவர்களிடம் இது குறித்துக் கேட்டால் தந்தித் தூதுவர் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள். இந்த நிலைமையின் காரணத்தைப் பொது மக்களுக்கு பத்திரிகைவாயிலாக தபால் திணைக்கள உயரதிகாரிகள் தெரியப்படுத்துவார்களா?

தற்போது யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய சேவைகள் சீரடைந்து வரும் வேளையில், தபால் சேவையில் மட்டும் இக்குறைபாடு இருந்து வருகிறது. உயரதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

ப. சி. தரன்

வட்டுக்கோட்டை.

# குடும்பப் பதிவுகள் நல்லூரில் மீளாய்வு

இராணுவத்தினரால் பதிவு செய்யப்பட்ட குடும்பப் பதிவுகள் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

ஜே — 100, ஜே — 101, ஜே—102, ஜே—103, ஜே 104, ஜே—105 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலேயே மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் குடும்பப் பதிவுகள் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளமையால் மீளப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (ஐ 86)

## நெடுந்தீவில் நீண்டகாலம்

# மரண விசாரணை அதிகாரி இல்லாது மக்கள் பெரும் அவதி

நெடுந்தீவு, மார்ச் 8

நெடுந்தீவில் மரண விசாரணை அதிகாரி இன்மையால் அங்கு இடம்பெறும் திடீர் மரணங்களின்போது மரணமானவரின் சடலத்தை இரண்டு அல்லது மூன்று தினங்கள் வைத்திருந்து ஊர்காவற்றுறைப் பொலீஸாரின் அறிவுறுத்தல்கள் கிடைத்த பின்னரே அடக்கம் செய்ய வேண்டியுள்ளது.

கடந்த வாரம் தவறுதலாக கிணற்றுள் விழுந்து மரணமான ஒருவரின் சடலம் ஊர்காவற்றுறைப் பொலீஸாருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர்களின் அறிவுறுத்தல் கிடைத்த பின்னரே கிணற்றினுள் இருந்து வெளியில் எடுக்கப்பட்டது.

இதேபோன்ற நிலையே கடற்கரைகளில் ஒதுங்கும் சடலங்கள் மற்றும் திடீர் மரணமானவர்களின் சடலங்களுக்கும் ஏற்படுகிறது. மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிக்கும் பட்சத்தில் மேற்படி கஷ்டங்கள் நீங்கும் என மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-111)


உ

கணபதி துணை

# சதாபிஷேக விழா

சாவகச்சேரி - மந்துவில் ஹரர்

ஆயிரம் பிறைகண்ட பேரறிஞர், பல் புராண வித்தகர்

உயர்திரு. சுந்தரம் சின்னத்தம்பி ஆசிரியர்

(இளைப்பாறிய அதிபர்,

முன்னாள் கிராம சபை உறுப்பினர் வரணி)

அவர்களின் 86 ஆவது ஜன்மதினமான

நாளை (09.03.2000) வியாழக்கிழமை

முற்பகல் 10.00 மணியளவில்

கல்வயல்

வேதவனப்பிள்ளையார் ஆலயத்தில்

விநாயகர் அபிஷேகம், சதாபிஷேக வைபவம்

ஆலய பிரதம குருக்கள்

''கிரியாகான கலாமணி'', ''வேதாகம ஜோதி''

சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள்

தலைமையில் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் வருகை தரும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(74241) - குடும்பத்தினர்



சாவகச்சேரி நகர்

## மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின்

ஆதரவில் நடைபெறும்

# சர்வதேச மகளிர் தின விழா

## 08 - 03 - 2000

இடம்:- யா/மகளிர் கல்லூரி, சாவகச்சேரி.

காலம்:- 8-3-2000 புதன்கிழமை

நேரம்:- 2. 30 மணி

சங்கத்தின் தலைவர்

திருமதி உருத்திராதேவி ஷண்முகநாதன்

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்கள்:-

திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள்

(பிரதேச செயலர், தென்மராட்சி)

திருமதி மங்கையர்க்கரசி

திருச்சிற்றம்பலம் அவர்கள்

(ஓய்வுபெற்ற அதிபர்,

இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்)

இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சாவகச்சேரி நகர்

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்

டச்சு வீதி,

சாவகச்சேரி.

(சி/11331)


# உரிமத் தகடு

சண்டிலிப்பாய், மார்ச் 8

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தால் இந்த வருடத்திற்கான சைக்கிள் மற்றும் மாட்டு வண்டில் ஆகியவற்றுக்கான உரிமத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஐந்து ரூபா செலுத்தி இந்த உரிமத் தகடுகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-135)

# வெங்காயம் விலை உயர்வு

சண்டிலிப்பாய், மார்ச் 8

யாழ். மாவட்டத்தில் சந்தைகளில் சின்னவெங்காயத்தின் விலை அதிகரித்து வருகின்றது. கடந்த காலபோக வெங்காயச் செய்கையின் போது ஏற்பட்ட விலைவீழ்ச்சியினால் நஷ்டமடைந்த விவசாயிகளில் பலர் இம்முறை இச்செய்கையில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை.

அத்துடன் கடந்த தைப்போக வெங்காயச் செய்கை அப்போது அடிக்கடி பெய்த பெருமழையினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே சின்ன வெங்காயத்தின் விலை இங்கு தற்போது அதிகரித்துள்ளது.

சங்கானை, சுன்னாகம், பண்டத்தரிப்பு சந்தைகளில் சின்ன வெங்காயம் கிலோ 10 ரூபா முதல் 20 ரூபா வரை விற்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. (இ-135)

# பொருள்காட்சி

பருத்தித்துறை, மார்ச். 08

வடமராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்கும் பொருள்காட்சி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது.

முறைசாராக்கல்விப் பிரிவு, மற்றும் மனைப் பொருளியல் பொருள்காட்சி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் —

தொழில்நுட்பப் பொருள் காட்சி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் — நடைபெறவுள்ளது. (இ-118)

# ஆடைகளின் கண்காட்சி

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் அறவழி போராட்டக் குழுவும் இணைந்து நடத்தும் தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க. சந்திரகுமாரன் தலைமையில் நடைபெறும்.

சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார் என கழகச் செயலாளர் லயன் வீ. வீ. மகாலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

# பாம்பு தீண்டும் சம்பவங்கள் அதிகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 8

தென்மராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக பாம்புக் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பாம்புக் கடிக்கு உள்ளானோரில் பெரும்பாலானோர் நெல் வயல்களில் வேலை செய்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனியன்று பெருங்குளம் நெல் வயலில் பாம்பினால் கடியுண்ட கல்வயலைச் சேர்ந்த பத்மநாதன் இந்திரன் (வயது 32) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117-31)

## 1999 ஆம் ஆண்டு

# நாய்களால் கடியுண்டோர்கள் எண்ணிக்கை 10 ஆயிரம்!

வலி. தென்மேற்கு, மார்ச் 8

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டு நாய் கடித்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 736 பேர்.

இவர்களில் 12 பேர் கிராம மட்டத்தில் நாய்கடிக்கு இலக்காகி இறந்துள்ளதாக யாழ். ஆஸ்பத்திரி புள்ளி விவரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

எதிர் காலத்தில் நாய்க்கடிக்கு இலக்காகி இறப்புக்கள் ஏற்பட அதிக வாய்ப்புண்டு என்றும்—

நாய்க்கடிக்கு இலக்கானவர்கள் உடன் அதற்குரிய சிகிச்சை நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும் —

மருத்துவ வட்டாரங்கள் வலியுறுத்தியுள்ளன. (ஐ-185)

# கரந்தன் பாடசாலையில் 5 ஆவது முறையாகத் திருட்டு

கோப்பாய், மார்ச் 8

நீர்வேலி, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் பாடசாலைக் கதவுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

இப்பாடசாலையில் ஐந்தாவது முறையாக இத்திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருள்களைத் திருடிய விசமிகள் வகுப்பறைகளை அசிங்கப்படுத்திச் சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-72]

# பொதுக் கூட்டம் நடத்தக்கோரிக்கை

திருநெல்வேலி, மார்ச் 8

இதுவரை இவ்வாண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டத்தையும், புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவையும் நடத்தாமல் இருக்கும் சனசமூக நிலையங்கள் அவற்றை விரைவில் நடத்தி அதன் விவரங்களை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தலைமை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தனேஸ்வரி பாஸ்கரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலர் பிரிவுரீதியாக சனசமூக நிலையங்களின் சமாஜம் அமைப்பதற்கும் சம்மேளனம் அமைப்பதற்கும் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு விவரம் அவசியம் தேவைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-135-30)

# கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருநாள்

நெடுந்தீவு, மார்ச் 8

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவதினம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும்.

மேற்படி பெருநாள் நினைவாக அன்றைய தினம் நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில்விசேட திருப்பலிப் பூசைகள் நடைபெறும் என கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய மூப்பர் தெரிவித்தார். கடந்த 15 வருடங்களாக இந்த உற்சவம் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-111)


# விசேஷ பிரார்த்தனையும் அன்னதானமும்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும்

கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு. சிற்றம்பலம் தர்மசீலன்

அவர்களுடைய பிறந்ததினத்தை முன்னிட்டு நல்லூர் தேரடியில் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நாளை (09-03-2000) வியாழக்கிழமை விசேஷ கூட்டுப்பிரார்த்தனையும் அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும். சகல அடியார்களையும் இதில் கலந்துகொள்ளும்படி அன்பாக வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்.

நல்லூர். (74233)



மயிலிட்டி

# காணிக்கை மாதா திருநாள்

## திருநாள் பாடற் பூசை

நாள்: 12-03-2000 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 10-30 மணி (புதியநேரம்)

திருநாள் பாடற் பூசை யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெறும்.

காணிக்கை அன்னையின் ஆசிர்வாதத்தைப் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெல்லிப்பழையூடாகவும், சேந்தாங்குளம் ஊடாகவும் பக்தர்கள் வழிபாட்டிற்கு வர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பங்குத் தந்தையும்

பங்கு மக்களும்.

காணிக்கை மாதா ஆலயம்,

மயிலிட்டி.

(74247)

# வெள்ளியன்று பீஹாரில் புதிய அரசு நம்பிக்கை வாக்கெடுப்பை நாடும்

புதுடில்லி, மார்ச் 8

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் புதிதாகப் பதவியேற்றுள்ள முதலமைச்சர் நித்தீஸ்குமார் தலைமையிலான அரசு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சட்டமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை நாட உள்ளது.

நேற்றுக் காலை ஆரம்பமான சட்டமன்றக் கூட்டத் தொடரில் தற்காலிக சபாநாயகர் புதிய உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். நாளை புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

புதிய அரசு பதவியேற்ற 10 நாள்களுக்குள் தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று முன்னதாக ஆளுநர் உத்தரவிட்டிருந்தார். இதற்கமைய முதலமைச்சர் நித்திஸ்குமார் நாளை மறுதினம் அரசு மீதான நம்பிக்கைப் பிரேரணையை சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

பெரும்பான்மையை நிரூபிக்க நித்தீஸ் குமார் தலைமையிலான அரசுக்கு 163 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. எனினும் 122 உறுப்பினர்களின் ஆதரவே நித்திஸ்குமார் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தற்போது உள்ளது. எனவே பெரும்பான்மைக்குத் தேவையான ஆதரவைப் பெறக் கூட்டணி சுயேச்சை உறுப்பினர்களின் ஆதரவை நாடி உள்ளது.

**உலக அரங்கில்**

ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களை விலைகொடுத்து வாங்க நித்திஸ்குமார் அரசு முயன்று வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

அதேசமயம்—

தனிப் பெரும் கட்சியாக உருவாகிய ராஷ்ட்டிரிய ஜனதாதள் கட்சியை அரசமைக்க அழைக்கும் வரை தாம் போராடப் போவதாக லாலு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

## பஸ் 'விபத்தில் 52 பேர் பலி

இஸ்லாமாபாத், மார்ச் 8

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 52 பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் காயமடைந்தனர்.

கராச்சியில் இருந்து 600 கிலோ மீற்றர் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. திருமண வீடு ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றே விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்றதனால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் ஷைபுல்லாஷா என்ற நதியில் வீழ்ந்து மூழ்கியது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(இ-6-9)

## தலிபானின் தாக்கம் அதிகரிப்பு

பாகிஸ்தானில் பொருளாதாரம், சமுதாயம், நிறுவன அமைப்புகள் ஆகியவற்றில் தலிபான்களின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இதனால் அவை தீவிர நெருக்குதலுக்கும் உள்ளாகின்றன.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் வசித்து வருபவருமான பெனாசீர் பூட்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார். பிரான்ஸ் சென்ற அவர் பாரிஸில் செய்தியாளர்களிடம் இதனைக் கூறினார்.

இன்றைய சூழலில் நாடு தீவிரவாத இஸ்லாமிய இயக்கங்களிடம் இருந்துதான் மிகப் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருகிறது என்றும் அவர் சொன்னார்.

# அடுத்தசட்டமன்றத் தேர்தல் வரை தி. மு. க கூட்டணி தொடரும்

## இல. கணேசன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 8

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்றத் தேர்தல்கள்வரை தற்போதைய தி. மு. க கூட்டணி தொடரும் என்று தமிழக பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் இல. கணேசன் தெரிவித்தார்.

நாகர் கோயிலில் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டு மக்கள் மாநிலத்தில் கூட்டணி அரசு அமைக்கப்படுவதை விரும்பமாட்டார்கள். எனவே சட்டமன்றத் தேர்தலில் எமது கூட்டணி வெற்றி பெற்றால் தி. மு. க தனித்தே ஆட்சி அமைக்கும்.

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல்களில் அ. தி. மு. கவுடன் தொடர்ந்து கூட்டணி அமைப்பது என த. மா. கா. தலைவர் க. மூப்பனார் தெரிவித்திருப்பது அந்தக் கட்சியின் தற்கொலைக்கு ஒப்பானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-6-9)

## தாய்வானைப் பிடிக்கும் திறன் சீனாவிடம் இல்லை

வாஷிங்ரன், மார்ச் 8

தாய்வானை இராணுவ ரீதியில் கைப்பற்றும் திறன் சீனாவுக்குக்கிடையாது என்று அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ. ஏயின் பணிப்பாளர் ஜோர்ஜ் டெனெட் தெரிவித்துள்ளார். (6)

## பொஸ்னிய யுத்தக் குற்றவாளி கைது

பெல்கிரேட், மார்ச் 8

பொஸ்னிய யுத்தக் குற்றவாளி ஒருவரை சர்வதேச அமைதிப் படையினர் கைது செய்துள்ளனர்.

1992 முதல் 1995 வரையான காலப்பகுதியில் பொஸ்னியாவில் இடம்பெற்ற இனப் படுகொலைகள் தொடர்பாகவே பஹாக் என்ற இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் யுகோஸ்லாவியாவில் உள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (6)

## நான் மட்டும் இறந்திருக்கலாம்

இளவரசி டயானாவுக்கும் அவரது காதலருக்கும் பதிலாக நான் இறந்திருக்கலாம் என்று டயானாவின் மெய்ப்பாதுகாவலர் கூறி உள்ளார்.

டயானா உயிரிழந்த கார் விபத்தின் போது உயிர் தப்பிய ஒரே நபர் அவரது மெய்ப் பாதுகாவலர் கீஸ் — ஜோன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (-6)

### வட அயர்லாந்தில்

# சட்டசபை இயங்கவில்லை எனின் ஆயுதக் கையளிப்பு சாத்தியமற்றது

லண்டன், மார்ச் 8தாவது:

வட அயர்லாந்து சட்டசபையை மீண்டும் இயங்கச் செய்யாமல் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கையளிக்கும் என்று எண்ணுவது சாத்தியமற்றது என வட அயர்லாந்துப் பிரதமர் பேர்ட்டி அஷெர்ன் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசும்போது நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டசபை கலைக்கப்பட்ட பின்னர் கடந்த மூன்று வாரங்களாக அது தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இது வரை அந்தப் பேச்சுக்களில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

ஆனால் மீண்டும் சட்டசபையை இயங்க வைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

சட்டசபைமீண்டும்இயங்காவிட்டால் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கையளிப்பது மிகச் சிரமமானதொரு நடவடிக்கையாக இருக்கும் அல்லது ஆயுதக் கையளிப்பு என்பது நடைபெறாமலேயே போய் விடக்கூடும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

வட அயர்லாந்து சமாதான உடன்படிக்கைக்கு அமைய ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்ததை அடுத்து அங்கு புதிதாக ஏற்படுத்தப்பட்ட சட்டசபை தற்காலிகமாகக் கலைக்கப்பட்டது. அதன் பின்னர் அங்கு பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

சமாதானஉடன்படிக்கைக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சியில் வட அயர்லாந்துத் தலைவர்களும் அமெரிக்க அதிகாரிகளும் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். (இ-6-9)

# செச்சின் அதிபரைக் கைது செய்ய ரஷ்ய நீதிமன்றம் உத்தரவு

மொஸ்கோ, மார்ச் 8

செச்சினிய அதிபர் மஸ்கடோவை கைது செய்யுமாறு ரஷ்ய நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

வன்முறைகளைத் தூண்டிவிட்டது, தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டது ஆகிய குற்றச் செயல்களுக்காகவே மஸ்கடோவைக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

செச்சினியத் தலைவர்கள் பலரை தீவிரவாதச் செயல்களுக்காகக் கைது செய்வதற்கு ஏற்கனவே ரஷ்ய நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன. தற்போது அதன் உச்ச நடவடிக்கையாக செச்சினிய அதிபரைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தத் தலைவர்கள் எவரும் செச்சினியாவை விட்டு வெளியேறாமல் தடுப்பதற்காக இன்டர்போலின் உதவியை நாடப் போவதாகவும் ரஷ்யா அறிவித்துள்ளது.

மஸ்கடோவைக் கைதுசெய்ய உத்தரவிடப்பட்டிருப்பதன் மூலம் செச்சினியாவுடன் எதிர்காலத்தில் சமாதான முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளும் எண்ணம் ரஷ்யாவுக்கு இல்லை என்பது தெளிவாகின்றது என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-6-9)

# 363 பொதுமக்கள் கடந்த மாதம் செச்சினியாவில் கொல்லப்பட்டனர்

லண்டன், மார்ச் 8

செச்சினியத் தலைநகர் குறோஸ்னியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர் ரஷ்யப் படையினர் கடந்த மாதம் மட்டும் அங்கு 363 பொதுமக்களைப் படுகொலை செய்துள்ளனர்.

லண்டனில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. இந்தப் படுகொலைச் சம்பவங்களின் போது உயிர் தப்பியவர்களை ஆதாரம் காட்டி இந்தச் செய்தியை அப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

குறோஸ்னியைக் கைப்பற்றிய பின்னர் நகரை அண்டியுள்ள கிராமங்களை நோக்கி ரஷ்யப் படையினர் முன்னேறினர். அப்போது அந்தக் கிராமங்களில் அகதிகளாகத் தங்கி இருந்த மக்கள் வெள்ளைக் கொடிகளைஏந்தியவாறு படையினரின் முன் வந்தனர். எனினும் ரஷ்யப் படையினர் அவர்களை நோக்கி கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்—

என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (இ-6-9)

# ஐ.நா.மனித உரிமைகள் அதிகாரி அடுத்த மாதம் செச்சின் விஜயம்

நியூயோர்க், மார்ச் 8

செச்சினியாவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக ஐ. நா மனித உரிமைகள் அதிகாரி மேரி றொபின்சன் அடுத்த மாதம் செச்சினியாவுக்கு செல்லவுள்ளார்.

ரஷ்யப் படையினர் செச்சினியாவில் பெருமளவு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. இதனை அடுத்து மேரி றொபின்சனை செச்சினியாவுக்கு விஜயம் செய்யுமாறு ரஷ்ய அரசு அழைப்பு விடுத்திருந்தது. அதனை ஏற்றுக்கொண்ட அவர் அடுத்த மாதம் தான் அங்கு விஜயம் செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

ரஷ்ய அரசின் சார்பில் சீருடை அணிந்த ஆயுதபாணிகள் செச்சினியாவில் மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தீவிர விசாரணைகள் நடத்தப்பட வேண்டி உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-6-9)

# இந்தோனேசியாவில் பரவிவரும் காட்டுத் தீயால் சூழல் மாசடையும்

## சுற்றுச்சூழல் அவதானிகள் எச்சரிக்கை

ஜகார்த்தா, மார்ச் 8

இந்தோனேசியாவின் மத்திய சமுத்திராப் பகுதியில் மூண்டுள்ள பெரும் காட்டுத் தீயினால் சூழல் மாசடையும் அபாயம் தோன்றி உள்ளதாக சுற்றுச் சூழல் அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

இந்தக் காட்டுத் தீ பல இடங்களில்எரிந்து கொண்டிருப்பதாக சிங்கப்பூர் வானிலை அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது. செய்மதிகள் மூலம் கிடைத்த புகைப் படங்களில் இருந்து காட்டுத் தீ மூலம் பரவும் பெரும் புகை மண்டலம் அலாஸ்கா நீரிணையின் மேலாகப் பரவி வருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

இந்தப் புகை மண்டலம் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு இந்தோனேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் வான் பரப்பில் நுழையும் போது சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று சூழல் அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

தீயை அணைப்பதற்கு இந்தோனேசிய அரசு உடனடி அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம்—

சிங்கப்பூரில் தற்போது வீசும் காற்றின் திசை இன்னும் ஓரிருதினங்களில் மாறிவிடக் கூடும் என்பதனால் புகை மூட்டம் பொதுமக்களுக்குப் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தாது என சிங்கப்பூர் வானிலை அவதானிப்பு நிலையம் கூறியுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் இந்தோனேசியாவில் பரவிய இவ்வாறான பெரும் காட்டுத் தீ காரணமாக தெற்காசியா முழுவதும் சூழல் பாதிப்புக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

(இ - 6 - 9)

# சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக 500 பேருக்கு எழுத்துமூலப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 8

சாரதி அனுமதிப் பத்திரம் கோரி யாழ். செயலக மோட்டார்த் திணைக்களத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கான 'வீதி ஒழுங்கு கைந்நூல்' சம்பந்தமான எழுத்து மூலமான பரீட்சைகள் இன்னும் ஒருவார காலத்தில் இங்கு நடைபெற உள்ளதாக யாழ். செயலகமோட்டார் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு ஒகஸ்ட் வரையான காலப் பகுதியில் சாரதி அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பித்த சுமார் 500 விண்ணப்பதாரிகளுக்கே முதல் கட்டமாக எழுத்துப் பரீட்சைகள் இங்கு நடைபெறவுள்ளன.

வீதி ஒழுங்குகள் சம்பந்தமான எழுத்து மூலப் பரீட்சையில் சித்தி பெறத்தவறுபவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்திபெறுபவர்களே பின்னர் போக்குவரத்து சம்பந்தமான செயல்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

குடா நாட்டிலிருந்து சாரதி அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு இங்கேயே பரீட்சைகளை நடத்துவதற்காக யாழ். செயலக மோட்டார்த் திணைக்களத்தில் அதிகாரி ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

எனினும் பரீட்சகரால் இங்கு பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் பின்னர் கொழும்பு மோட்டார்த் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்தே சாரதி அனுமதிப் பத்திரங்கள் கணனி மூலம் பதிக்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வீதி ஒழுங்கு கைந்நூல்கள் செயலகமோட்டார்த்திணைக்களத்தில் வழங்கப்படுகின்றன.

(இ-9)

## எண்மருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். மேலதிக மாவட்ட கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமை புரிவதற்கென 8பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து இந்தஇடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் வழங்கப்பட்ட 8 பேரின் விவரம் வருமாறு—

எஸ். வீரசிங்கம், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர் வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்தும்—

பி. புலேந்திரராஜா தீவகக் கல்வி வலயத்தில் இருந்தும் —

பி. சிவபாலன், எம். வேதநாயகம், திருமதி எஸ். இராஜேஸ்வரன், செல்வி கே. நளாயினி, செல்வி டி. ஜெயந்தாதேவி ஆகியோருக்கு யாழ். கல்வி வலயத்தில் இருந்தும்— இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

(இ-10)

## குருபூசை

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கச்சியப்ப சிவாச்சாரியாரின் குருபூசை நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் விசேட பஜனை, கூட்டுப் பிரார்த்தனை என்பன இடம்பெறவுள்ளன.

(இ-க-30)

## தவக்காலச் சிந்தனை

(1 ஆம் நாள்)

இறைமனித சந்திப்பின் உன்னத காலமாகிய புனித தவக்காலத்தின் ஆரம்ப தினம் இன்று. ஆண்டாண்டு தோறும் திருச்சபைத் தாயினால் நமக்குக் கொடுக்கப்படும் இத்தவக்காலம் ஏன்? எதற்காக? ஆதிப்பெற்றோரின் கீழ்ப்படியாமையின் விளைவு மனுக்குலத்தைப் பாதித்து அதன் மூலம் இறையுறவிலிருந்து தூரப் பிரிந்த மனிதனை மீண்டும்ஒன்றிணைக்கும் காலமாகவே இந்தத்தவக்காலம் நமக்குத் தரப்பட்டுள்ளது.

''மனிதனும் புனிதனாகலாம்'' என்ற கோட்பாட்டை எடுத்துரைக்கும் காலமாகிய இத் தவக்காலம் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஏற்புடையதே.

எனவே இறைசாயலான மனிதன் மண்ணோடு மண்ணாகப் போகும் இந்நிலையற்ற வாழ்வை விடுத்து செப தப தான தருமங்கள் மூலம் உளமாற்றம் பெற முனைவோம். உங்கள் உடைகளை அல்ல; மாறாக உங்கள் உள்ளங்களையே கிழித்துக் கொள்ளுங்கள் என்ற இறை வார்த்தையை எம் வாழ்வில் செயற்படுத்துவோம்.

கு. தவம்
(மானிப்பாய்)

# இறைவனுடைய அருட்சக்தியைப் பெறுவதற்கு என்னசெய்யவேண்டும்?

## ராமகிருஷ்ணர் சொல்வதைக் கேளுங்கள்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த தினம் இன்றாகும்.

இன்று உலகம் போகும் போக்கைப் பற்றி யாம் பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை. இவ்வுலகம் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டது; இறைவனால் காப்பாற்றப் படுகின்றது; ஈற்றில் இறைவனால் அழிக்கப் படும். இதுவே மாறாத நியதி.

மனிதன் நிம்மதியாக வாழ உதவுவதே இறை வழிபாடு. இவ்வழிபாடு மிகவும் ஆழமானதாக இருக்க வேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பக்தியின் லட்சணம் குறித்து மிக இலகுவில் விளங்கும் வண்ணம் பகர்ந்துள்ளார்.

ஒரு தாய்க்குத் தனது குழந்தையிடத்தில் உள்ள ஈர்ப்பு, ஒரு கணவனுக்குத் தனது மனைவியிடத்தில் உள்ள வேட்கை, ஓர் உலோபிக்குப் பணத்தின் மேல் உள்ள பேராசை — இவ்வகையான— மூன்று விதமான— கவர்ச்சியை ஒன்று திரட்டி இறைவனிடம் செலுத்தினால் நிச்சயமாக அவனைக் காணலாம். கடவுளுடன் பேசலாம்; அவனது அருள் சக்தியைப் பெறலாம்.

உலகிடை விஞ்ஞான வளர்ச்சி அபரிமிதமாகி விட்டது. இருப்பினும் மனதில் சாந்தி, அமைதி கிடைக்காது பல நாடுகளும் ஆயிரம் ஆயிரம் மக்களும் அல்லற்படுகிறார்கள். தற்கொலையின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிவருகின்றது.

ஸ்ரீ பகவான் கிருஷ்ணர் '' என் மேலாம் மகிமைகளில் முக்கியமானவைகளை உனக்கு மொழிகிறேன். ஏனெனில் என் விபூதியின் விஸ்தரிப்புக்கு முடிவில்லை '' (கீதை 10—19 ஆவது சுலோகம்) என்கிறார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இதை எப்படி விளக்குகிறார்?

ஒருவன் மது அருந்த வேண்டில், அவனுக்கு ஓர் அளவு தான் தேவை. அதை அவன் பருகியதும் அவன் தன்னை மறந்து விடுகிறான். இதனை விடுத்து அந்த மதுக்கடையில் எவ்வளவு— மொத்தமாகத் தனை போத்தல்—மது இருக்கிறது என்பதனை அவன் அறியத் தேவையில்லை. ஆகவே இறைவனை அடையப் பக்தியைப் பெருக்கி, சாதுக்களுடைய கூட்டத்தை நாடி, அவர்களுடன் சத் சங்கம் செய்யச் செய்யப் பக்தி மேலீட்டினால் இறைவனின் கருணை, கடாட்சம் கிட்டும். பின்பு இவ்வுலகமும் இவ்வுலகத்தின் வியாபகம் யாவும் தெற்றென விளங்கும் என்றார்.

ஸ்ரீராம கிருஷ்ணர் அடிக்கடி பின்வருமாறு சொல்லுவார். மந்திரவித்தையில் கவனம் செலுத்தாதே. மந்திர வித்தை காட்டும் மனிதர் தான் உண்மையானவன். அவனிடம் நெருங்கிய தொடர்பு கொண்டால் யாவும் தெரிய வரும்.

இந்த யுகத்தில் கல்வி அறிவு சற்றும் பெறாத ஸ்ரீ ராமகிருஷ்ணர், பண்டிதர், பாமரர், குழந்தைகள் யாவரும் எளிதில் விளங்கும் வண்ணம் சிறிய சிறிய கதைகள் மூலம் அரும் பெரும் விடயங்களை நமக்குத் தெரிய வைத்துள்ளார்.

''ஒருவன் விளக்கின் உதவியால் கீதையைப் படிக்கலாம்; அதேவிளக்கின் உதவியால் திருடலாம்; அது விளக்கின் குற்றம் அல்ல. எவ்வாறு ஒரு விளக்கானது எண்ணெய் இல்லாமல் எரியாதோ அதே போன்று மனிதன் இறைவனின் கிருபையில்லாமல் வாழ முடியாது'' ''எல்லா மதங்களும் ஒரே கடவுளை அடைய வழிவகுக்கின்றன'' என்றார்.

நாம் ஸ்ரீராம கிருஷ்ணரின் பிறந்த தினத்தில் அவரது அமுதமொழிகள் சிலவற்றைச் சிந்தித்து அமைதி அடைவோமாக. ★

சுவாமி சித்ரூபானந்தா
(ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்)

# ஓவியப் போட்டியில் முதல் இடம்

கொக்குவில், மார்ச் 8

நீதி, அரசமைப்பு விவகார இன விவகார தேசியஒருமைப்பாட்டு அமைச்சின் இணை நிறுவனமாகிய தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகம் வடக்கு — கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களிடையே நடத்திய ஓவியப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள் இருவருக்கு முதலாம், இரண்டாம் இடங்கள் கிடைத்துள்ளன.

பாலசுப்பிரமணியம் சுரேஷ் கண்ணா முதலாவது இடத்தையும் தவராசா சபேஸ் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

(இ-69)


## விவசாய பீடம்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மாணவர்களுக்கான அறிவித்தல்

1. முதலாம் வருடம் முதலாம் அரையாண்டு (1999 / 2000) புதிய அனுமதி.
2. இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு (1998 / 99).
3. மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு (1997 / 98).
4. மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு (1996 / 97, 1995 / 96).

மேற்படி பிரிவுகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்
(சி/11332)



உ
முருகன் துணை
புதுவை அருள்மிகு

## ஆலடி முருகன் தேவஸ்தானம்

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

மேற்படி ஆலய திருப்பணி நிதிக்காக 04-03-2000 ஆம் திகதி ஆலய மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட

### சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு — இல. 1788
இரண்டாம் பரிசு — இல. 984
மூன்றாம் பரிசு — இல. 4672

ஐந்து ஆறுதல் பரிசில்கள்

789 3515 4223
1696 302

உதவிகள் புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் பரிசுக்குரியவர்கள் 20—03—2000 ஆம் திகதிக்கு முன்னர் பரிபாலன சபையினரிடம் வந்து பரிசில்களைப்பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பரிபாலன சபையினர்.

விளம்பர அன்பளிப்பு

நியூ விதுஷா நகைமாடம்
191, H. K. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(74279) T. P. 2903



## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்காய்வுப் பிரிவில் கடமையாற்றும் கூட்டுறவுப் பரிசோதகர்

திருமதி பிறேமலதா சண்முகம் அவர்களின்
அன்புத் தந்தையார்

### சிதம்பரப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

அவர்கள் காலமானதால் சோகத் துயரில் வாடும் குடும்பத்தவர்களின் துயரத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்,
நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்.
கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம்.
(சி/11333)

உதயன்

## பெண்ணுரிமையை மதிப்போம்!

இன்று சர்வதேச மகளிர் தினம். சமூகத்தில் அரைவாசிப் பங்கினரான பெண்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட்டு அவர்கள் சமத்துவத்துடன், சம உரிமையுடன், சம அந்தஸ்துடன் வாழ வகை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கும் நாள்.

பெண்களின் சுதந்திரம் உறுதி செய்யப்படுவதற்கு சமூகத்தில் ஒரு விழிப்புணர்ச்சி, மாற்றம் தேவை என்ற எண்ணம் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே துளிர் விட்டது எனலாம்.

மேலை நாட்டவர்களான புளோரா டிரைஸ்ரன், மாட்டின்ஸ் குவர்ட், கிளாரா றெட்கின் போன்றோர் பெண் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடியதில் முதன்மையானவர்கள்.

1857 இல் மார்ச் 8 ஆம் நாள் நியூயோர்க் நகர் நெசவுப் பெண்கள் அணி திரண்டு தொழிற்சங்க ரீதியாக உரிமைப் போரில் குதித்தனர்.

இதனை நினைவு கூரும் முகமாகவும், 1910 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டின் கொப்பன்ஹேகன் நகரில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக சோஷலிஸ்ட் பெண்கள் மாநாட்டில் கிளாறா செட்கின் அம்மையார் வெளிப்படுத்திய கருத்துக்கு அமையவும் மார்ச் 8 ஆம் திகதி அனைத்துலகப் பெண்கள் தினமாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

அதன்படி 1911 முதல் அமைதி, சமத்துவம், ஜனநாயகம் என்பவற்றுக்காகப் போராடப் பெண்களை அணி திரட்டும் எழுச்சி நாளாக இது கொண்டாடப்படுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு, இருபதாம் நூற்றாண்டு கடந்து இன்று புத்தாயிரமாம் ஆண்டிலும் பிரவேசித்துவிட்டோம். ஆனால் பெண்களை சமத்துவமாகப்பேணும் பகுத்தறிவு நமது எதிர்பார்த்த அளவுக்கு சமூகத்தில் வேரூன்றவில்லை என்றே சொல்லவேண்டும்.

குடும்ப, சமூக மட்டங்களில் மட்டுமல்லாமல் அரச மட்டத்திலும் கூட பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுவதும், அடிப்படை உரிமைகள் மீறப்படுவதும், தனித்துவம் சிதைக்கப்படுவதும் தொடர்கின்றது.

போகப் பொருளாகவும், வீட்டு வேலைக்காரர்களாகவும் பெண்களைக் கருதும் சமூக இழிநிலை இன்னும் மாறிவிடவில்லை என்பது வேதனைக்குரியது.

பெண்கள் களமிறங்கி, ஆயுதம் ஏந்தி, ஆணுக்கு நிகராகப் போராடும் காலநிலை ஏற்பட்ட பின்னரும் கூட பெண்களைப் பாலியல் ரீதியாக துன்புறுத்தல் செய்வதும், தொல்லை கொடுப்பதும், அடக்குவதும் நமது சமூகத்தை விட்டு ஒழியவில்லை என்பது வியப்புக்குரிய— கவலை தரும் — விடயமாகும்.

இந்நிலைமை மாறுவதற்கு பெண்கள் உரிமை பற்றிய விழிப்புணர்ச்சி, எழுச்சி — ஏற்பட வேண்டும். பெண்களிடம் மட்டும் அந்த உத்வேகம் ஏற்பட்டுப் பயனில்லை. ஒட்டுமொத்த சமூகமும் இந்த வகையில் புரட்சி புரிய முன்வரவேண்டும்.

''எல்லோருக்கும் சுதந்திரம்; எல்லோருக்கும் உரிமைகள்; சொல்லிலும் செயலிலும் அனைவரும் சமம்'' — என்ற புதிய உலகப் போக்கு — சிந்தனை — வலுப்பெற்று வரும் இன்றைய நிலையிலே, ஆணாதிக்கம் இனி மேலும் காலூன்ற முடியாது; நீடித்து நிற்க முடியாது என்பதையும் பெண்ணுரிமையை மதிக்க மறுப்பவர்கள் அல்லது மிதிப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# பெண்கள் பற்றிய புரிந்துணர்வே சமூகத்தின் சுபீட்சத்துக்கு தேவை

''மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'' என்று பெண்ணின் பெருமை பற்றி முழங்குகிறார் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை. பெண் பிறப்பேபெருமை மிக்க பிறப்பு.

''அரிது அரிது மானிடராதல் அரிது என்று ஔவை வாக்கைச் சிரமேற் கொள்ளும் தெய்வப் புலவன் திருவள்ளுவர் ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள......'' என்று கேட்கிறார். இவ்வளவு பெருமைகளும் வாய்க்கப்பெற்ற பெண்களை 'அன்னையர்' என்றும் 'தாய்க்குலம்' என்றும் அன்புடனும் பாசத்துடனும் அழைக்கின்றோம்.

ஒரு சமூகத்தை உருவாக்குபவளும் பெண். சமூகத்தை வளர்ப்பவளும் பெண்ணே. சமூகத்தின் ஆணிவேராகத் திகழ்கின்ற பெண்கள் அச்சமூகத்திற்கு ஆற்றும் சேவை அளப்பரியது.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்று பெண்கள் பெருமையைப் போற்றினார் புரட்சிக் கவிஞர் பாரதி. இன்று பெண்கள் சமூகத்தின் அடிமட்ட வேலைகள் தொடங்கி அரசாளும் பணி வரை அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்குச் சரிசமனாக முன்னேறி வருகின்றனர்.

இன்று கிராமங்கள்தோறும் பெண்கள் தங்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நிறுவனரீதியாக அணிதிரண்டு வருகின்றனர். புழுதிபடிந்த கிராமங்கள் தோறும் மகளிர் அணிகள், மாதர் முன்னேற்றச் சங்கங்கள் என்பவற்றை நிறுவித் தமது பணிகளைப் பரவலாக்கி வருகின்றனர்.

எமது நாட்டில் சமூகத்திற்கு ஆரம்பக்கல்வி புகட்டும் பணியில் பெண்கள் ஈடுபடுவதைக் காணலாம். அனைத்துக் கிராமங்களில் உள்ள பாலர் பாடசாலைகளில் பெண்களே குழந்தைகளுக்குக் கல்வியூட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கப் பாடசாலைகளின் ஆரம்ப வகுப்புக்களில் கூட பெண் ஆசிரியைகளே பெருமளவில் கல்வி போதித்து வருவதைக்காணலாம். அன்பு பொறுமை, கருணை, தியாகம் போன்ற நல்ல பண்புகள் பெண்களிடம் இயல்பாகவே அமைந்து காணப்படுவதால் கிராமங்களில் கோவணாண்டிகளாகப் புழுதி அளைந்து விளையாடித் திரியும் பாலர்களுக்குக் கல்வியூட்ட வல்லவர்களாகப் பெண்கள் திகழ்கின்றனர்.

வதன் மூலமும் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றும் பணி மதிப்பிட முடியாத ஒன்றாகும். இன்றும் சமூகப்பண்பாட்டுக் கலைத்துறை வளர்ச்சியிலும் பெண்கள் தமது பங்களிப்பைச் செய்துவருவதால் சமூக சேவையில் அவர்கள் பெரும் பணியாற்றி வருவதோடு சமூக விழிப்புணர்விற்கும் வழிவகுத்து வருகின்றனர்.

எமது சமுதாயத்தினை உருவாக்குவதில் ஆண்களைவிடப் பெண்களே பெரும் பங்கினை வகிக்கிறார்கள். வீட்டிலும் சரி, வேலை பார்க்கும் வேலைத்தலங்களிலும் சரி, நிர்வாகத் திறமையுள்ளவளாகப் பெண் விளங்குகிறாள். உலகில் இன்றைய நிலையில், சகலதுறையிலும் அவள் ஆண்களுக்குச் சரி நிகராகவே வாழ்ந்து காட்டுகிறாள். கல்வி

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கம்சினி சண்முகரட்ணம்
(ஆண்டு 13, இராமநாதன் கல்லூரி)

இன்றும் கிராமியப் பொருளாதாரக் கைத்தொழில் வளர்ச்சியிலும் பெண்களின் பங்களிப்பு அளப்பரியது. கிராமங்களில் கிடைக்கும் பனையோலை போன்ற பொருள்களைப் பயன்படுத்தி பல்வேறு பாவனைப் பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றனர். ஆடு, மாடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவற்றின் மூலமும் வீட்டுத் தோட்டங்கள் செய்

# தேசிய பாதுகாப்புப் பற்றிய புதிய அணுகுமுறை அமைதிக்கு அவசியம்

போர்ப் பண்பாட்டிலிருந்து ஓர் அமைதிப் பண்பாட்டுக்கு மாறவேண்டிய அவசரதேவை இன்றுள்ளது.

மனித மேம்பாடு, அமைதி, மக்களாட்சி ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்த —ஒன்றை ஒன்று உறுதிப்படுத்துகின்ற — கூறுகள். இவையன்றி மனித மேம்பாடு — குறிப்பாகப் பெண்கள் மேம்பாடு—என்பது இன்று கேள்விக்குறியாகவே உள்ளது.

உலகில் போர் நடைபெற்றுப் பின்னர் அமைதி உருவான நாடுகளில்கூடப் பெண்களின் துயரங்களும் துன்பங்களும் தொடர்ந்து அறியப்படுகின்றது.

இராணுவ ஆதிக்கங்களும் அதிகாரக் கெடுபிடிகளும் பெண்களின் சுமைகளை அதிகரித்துள்ளன. அதிகரித்து வரும் வன்முறைப் போக்குகள் பெண்களின் முன்னேற்றத்தின் முக்கிய தடைக் கற்களாக அவர்கள் உடல், உளநல மேம்பாட்டைத் தாக்குகின்றன.

உலகெங்கும் வன்முறைப் பாதிப்புப் பற்றி—அமைதி பற்றி—அமைதிப் பேச்சுக்கள் பற்றி—ஆராய்ச்சிகள், அடுக்கடுக்காக நூல்கள், கட்டுரைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவைகள் யாருக்கு உதவப் போகின்றன? வன்முறைகளுக்கு அதிகம் உள்ளாகும் பெண்களின் பொறுப்பான பங்கு இங்கு எங்கே உள்ளது? வன்முறைகளுக்கு அஞ்சி, ஒதுங்கி ஒழித்து வாழும் பெண்களின் மனப்பாங்கில் தீவிர மாற்றங்கள் தேவை. வன்முறைகள் நடந்த பின்பு போர்க்கொடி தூக்குவதில் மட்டுமே எமது சமுதாயம் கவனம் செலுத்துகின்றது. இவற்றை வராது தடுத்து வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குப் பெண்கள் இன்று தயாராக இல்லை. எமது பிரச்சினைகளை முன்வைத்து எத்தனை போராட்டங்கள் எமது மண்ணில் நடந்துள்ளன? நடக்கும் வன்முறைகளை எப்படியாவது சமூகத்தின் பார்வையில் எட்டாது மறைத்து, ஒளித்துவிடவேண்டும் என்று பாடுபடுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் எமக்கு உரிமைகள் எப்படிக் கிடைக்கும்? அல்லற்படும் சமுதாயத்தில் வன்முறைகளைக் கைவிடுவதற்குச் சமுதாயம் முழுவதும் ஒரு கடமைப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இவை அரசாங்க பொறுப்புக்கள் அல்ல; மாறாக நாட்டின் பொறுப்புக்கள் ஆகும்.

ஒரு போர்ப் பண்பாட்டிலிருந்து ஓர் அமைதிப் பண்பாட்டுக்கு மாறுவது என்பது கடினமான செயல். இதற்கு நாட்டில் ஒவ்வொருவரது ஒத்துழைப்பும் தேவை.

பெண்கள் அனுபவித்து வரும் துயரங்கள் வன்முறைகளில் ஆண்களுக்கு பங்கில்லை என்று தட்டிக் கழித்துவிட முடியாது. ஒரு மாற்றம் தேவையாயின் அம் மாற்றத்தை ஏற்படுத்த ஒவ்வொருவரும் தேவை.

போர்க் கலாசாரத்திலிருந்து விடுபட்ட ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தேசிய பாதுகாப்புப் பற்றிய புதிய அணுகு முறை தேவை. மக்களாட்சியை உறுதிப்படுத்த— நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த — முதலில் இராணுவம் உறுதியளிக்க வேண்டும். ஏனென்றால் முழுமையான பாதுகாப்புள்ள, சுதந்திரம் இல்லாத ஓர் அமைப்பு முறையிலிருந்து முழுமையான சுதந்திரமுள்ள பாதுகாப்பு இல்லாத ஓர் அமைப்பு முறைக்கு நாம் செல்ல முடியாது.

போர் மற்றும் அதனைத் தொடர்ந்த பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பான நிறுவனங்கள் கூட படிப்படியாக அமைதிக்கான, அமைதியை நிலைநாட்டும் நிறுவனங்களாக மாற்றப்பட வேண்டும்.

குழப்பங்கள், பூசல்கள் வருமுன் தடுப்பது சாலச் சிறந்தது. இந்தத் தடுப்புத் தான் நமக்குவெற்றியை அளிப்பது. இந்த வெற்றியிலேயே மனிதனின் தனித்தன்மையான அறிவுத் திறன்கள் வெளிப்படுகின்றன. அளவு கோலும் அதுவே.

நாம் செய்தி ஊடகங்களில் வாசிக்கும், கேட்கும் நிகழ்வுகள் கூட இன்று ஆரோக்கியமானவையாக இல்லை. அமைதி, ஆரோக்கியம், இயல்பு நிலை ஆகியவை செய்திகள் ஆவதில்லை. கண்ணுக்குப் புலனாகாத இந்தச் செய்திகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க முயலவேண்டும்.

இன்று நாட்டின் பொருளாதாரம் மந்த நிலையில் சென்று கொண்டிருந்தாலும் அதிக செலவில் ஆயுதங்களை பெருமளவில் பயன்படுத்தி போரை தொடர்ந்து நடத்துவதற்கு நாடு தயாராக உள்ளது.

### சரோஜா சிவச்சந்திரன்

அணு ஆயுத உற்பத்தி, விற்பனை இவற்றை எதிர்த்து இன்று பெண்கள் நடத்தும் போராட்டங்கள் முனைப்புப் பெற்றுள்ளன.

சிக்கல்களின் ஆணி வேர்களைக் கண்டறிவது, தடுப்பது என்பதில் எமது மன உறுதியைக் காட்டவேண்டும்.

துயரத்தை எதிர்கொண்டு போரினால் களைப்படைந்த மக்கள் இன்று அமைதியில் நாட்டம் கொண்டுள்ளனர். போரில் ஈடுபட்டுள்ள பகுதியினர் கூட அமைதி வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர்.

உலக நாடுகளில் குறிப்பாக தென் ஆபிரிக்கா, நமீபியா அங்கோலா, எல்சல்வடோர், மொசாம்பிக் போன்ற நாடுக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

மாசி 26

வியாழக்கிழமை

திதி: திருதியை முற்பகல் 9.25 வரை.

நட்சத்திரம்: ரேவதி காலை 7.32 வரை.

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 7.54—9.24

ராகுகாலம்: 1.54—3.24

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பிரார்த்தனை செய்யும் எந்த மனிதனும் ஏதேனும் ஒரு புதிய விஷயத்தைக் கற்கத் தவறமாட்டான்.

எமர்சன்

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### துயரந்தீர அருள்செய்வாயே!

சுத்தமுள பால்நெய்தேன் பஞ்சா மிருதம்
சொரியினதீர் கொண்டுநிதம் தூநீ ராட்ட
பித்தனையோம் செய்யுபிழை பொறுத்தே காக்கும்
பேறே! யாழ். வண்ணையுறை வைத்தீஸ் வரனே!
முத்தனையாய்! முன்னைவினை முடிக்குந் தேவே!
மூவுலகும் தொழுதேத்தும் முனியே! வேதா!
இத்தரையின் துயரந்தீர்த் தின்ப வாழ்வை
என்றும் நாம் காண அருள் செய்குவாயே!

— ''முருகேசன்''

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

ஊரெழு மேற்கைச் சேர்ந்த ஆறுமுகம் சுரேஷ் என்பவரின் தேசிய அ. அட்டை (360081346V), விசேட அ. அட்டை (0903021852) இரண்டும் 4. 3. 2000 சனிக்கிழமை அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'உழவர்களஞ்சியம்', திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்து தகுந்த சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும்.
(74266)

புத்தூர் வடக்கு எரந்தனை என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசிங்கம் சாரதாம்பாள் என்பவரது விசேட அ. அட்டை 4.2.2000 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி செல்லும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் லிங்கம் புடைவை அகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(74275)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில், உரும்பிராய் இந்துக்கல்லூரியிலிருந்து ½ மைல் தூரத்தில் கிணற்றுடன் கூடியதும் வியாபாரத்துக்கும் குடியிருப்புக்கும் சாதகமாக அமைந்ததுமான 3½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப. பரமலிங்கம், ஞான வைரவர் கோயிலடி, உரும்பிராய்.
(சி/11330)

## கணிதம் O/L 2000

3-5 மாணவர்களை உள்ளடக்கிய குழு ரீதியான வகுப்புக்கள் மட்டும், திட்டமிடலும் கற்பித்தலும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா (கணிதம்) ஆசிரியரால் மேற்கொள்ளப்படும். உங்கள் வீடுகள் வரையான சேவை. தொடர்புகளுக்கு: விள. இல. 1012, மே/பா. உதயன்.
(74257)

## ஒத்துமாறல்

98 ஆம் ஆண்டு A/L இற்குரிய பௌதிக விஞ்ஞானத் துறையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஒத்துமாற விரும்புபவர் உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1012, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (74260)

## இறைச்சிக்கோழி

Broiler இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) நிறையும் பெற்றுக் கொள்ளலாம். இல-19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74073)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மெக்கானிக் மணமகனுக்கு தகுதியுடைய பெண் தேவை. தொடர்பு: மோகனராணி திருமண சேவை, இல. 1051, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.
(74180)

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட 21 - ஓட்டோவும் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளும் ரொபின் EY - 20 நீர் இறைக்கும் இயந்திரமும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: ப. தேவகுமார் (தேவு) மாவடிச்சந்தி, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
(74251)

மிகவும் நல்ல நிலையில் உள்ள Fisher இரட்டைக் கதவு Japan உற்பத்தியான குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு. வியாபார ஸ்தாபனங்களுக்கும் உகந்தது. தொடர்பு: க.முருகேசு, அச்சுவேலி தெற்கு (ஆஸ்பத்திரிக்கு அண்மையில்).
(74263)

# மதுவரி அத்தியட்சகர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். பிராந்திய மதுவரி அத்தியட்சகர் வீரபாகு துரைராஜா பருத்தித்துறைப் பிராந்தியத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மதுவரி ஆணையாளர் நாயகம் பந்துல விஜயரத்தின இது தொடர்பான பணிப்பை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ)

# சின்னமுத்து தடுப்பூசி

நவாலிப் பகுதியில் உள்ள 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசி இன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரைசென். பீற்றேஸ் தேவாலயத்தில் வைத்து ஏற்றப்பட உள்ளது.

அண்மைக் காலங்களில் நவாலிப் பகுதியில் சின்னமுத்து நோய்க்கான அறிகுறிகள் தோன்றியதை அடுத்து ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார அதிகாரி வி. தயமோகன் இந்த ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளார்.

(இ-4-185)

# பெண்கள் பற்றிய...

(7 ஆம் பக்கத் தொடர்)

விளையாட்டு, கலை, விண்வெளி ஆராய்ச்சி, போராட்டம் போன்ற சகல அம்சங்களிலும் ஆணுக்குப் பெண் சளைத்தவள் அல்லள் என்பதை வரலாற்றினூடே நாம் அறிய முடிகிறது.

இத்தனைக்கும் மத்தியில் இப்பெண்மை சமுதாயத்தில் ஒருபடி குறைந்த தரத்தில் வைக்கப்படுவதற்கான காரணங்கள் தான் என்ன? இத்தகைய நிலைக்குப் பெண்ணைப் பற்றி சமுதாயம் கொண்டுள்ள தவறான கண்ணோட்டம்தான் இதற்குக் காரணம் எனலாம்.

மானிட உருவாக்கத்தில் பெண் வகிக்கும் பங்கு எத்தகையது என்பது அளவிட முடியாதது. தந்தை ஒரு குழந்தை உருவாக்கத்திற்குக் காரணமாகஇருந்தாலும்அங்கு ஆண்மை போற்றப்படுவதில்லை. ஆனால் இங்கே பெண்மையின் 'தாய்மை' என்பது போற்றப்படுகிறது. குழந்தை கூட தனது முதல் வார்த்தையில் அப்பா என அழைப்பதில்லை. தாயையே 'அம்மா' என்று அழைக்கிறது. இவ்வாறு பெண்மை சமுதாயத்தில் சிறப்பிடம் பெறுகிறது.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்று பெண்களை வீட்டுக்குள்ளேயே கிணற்றுத் தவளைகளாக அடக்கி வாழ்ந்த தன்மை இன்றொழிந்து சகல துறைகளிலும் பெண்கள் ஆணுக்கு நிகராக வாழ்ந்து வருகிறார்கள்.

வீடாளும் பெண்மை இன்று நாடாளும் காலம் பிறந்துவிட்டது பெண்கள் தனது வேலைத் தலத்திலும் வீட்டிலும் தன் நிர்வாகத் திறமையை வெளிப்படுத்துகின்றாள்.

பெண்களுக்கு, ஆண்களை விட மனோவலிமை அதிகம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பெண்களைக் கோழைகள் என்று கூறுகின்றது இன்றைய ஆண் சமூகம். ஆனால் பெண்களின் வீரம் இன்று மட்டுமல்ல சங்ககாலத்தில் இருந்தே வெளிப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

புறநானூற்றுப்பாடல் ஒன்றில் தன் மகன் நெஞ்சில் வீரப் புண் அடைய வேண்டும் என ஆதங்கப்பட்ட அந்த வீரத் தாயை நாம் காண்கிறோம். அதே போன்று சமூகம் இன்று ஆண்களுக்கு நிகராகப் பெண்களின் வீரச் சிறப்பை மெச்சுகிறது. ஏன் இஸ்ரேலில் பெண்களுக்கு கட்டாய ராணுவப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது

ஆனால் இங்கு இன்று பெண் சமூகத்தில் சீதனம் எனும் வடத்தால் கட்டப்படுகிறாள். ஏன் இந்த நிலை? இது சமூகத்தில் பெண்ணடிமை வளரவே வகை செய்கிறது. இன்று பெண்கள் இத்தகைய அடிமை நிலையை எதிர்க்கத் தொடங்கிவிட்டனர்.

மனிதன் ஒவ்வொருவனும் அவனவனுக்குரிய தனித் தன்மையினால் மற்றவரிடமிருந்து வேறுபடுகின்றான்; ஆளுமை வித்தியாசமடைகிறது படைப்பிலேயே பெண்களுக்கெனப் புறம்பான சில அம்சங்களும், ஆண்களுக்கெனப் புறம்பான அம்சங்களும் இருவரையும் பிரித்து வைத்துள்ளன.

ஒவ்வொருவரது தனித்தன்மையையும் வைத்துக் கொண்டு அன்றிலிருந்து இன்றுவரை பெண் என்றால் பேதை, பயந்தவள், கோழை, பின்புத்திக் காரி, மென்மையானவள் என்றெல்லாம் சமூகம் அவளது வளர்ச்சிக்குத் தடைக் கற்களை வைத்துள்ளது. சமுதாயத்தில் ஆண்கள் ஒவ்வொரு விடயங்களாலும் தட்டிக் கொடுத்து வளர்க்கப்படுகின்றனர். ஆனால் பெண்கள் பல வழிகளிலும் தட்டிக் கழிக்கப்படுகின்றனர். அவர்களுக்குரிய இயல்பான சில விடயங்களை வைத்துக்கொண்டு அவளைக் கொச்சைப் படுத்துகின்றது சமூகம். இந்நிலை மாறவேண்டும்.

பெண் அடிமை, பெண் விடுதலை என்றெல்லாம் பேசப்படும் இந் நாள்களில் பெண்களை அடக்கியாள முயல்பவர்கள் தனியே ஆண்கள் மட்டுமல்ல; அதற்கு உடந்தையாகுபவர்கள் பெண்களுமே. பெண்கள் பற்றி இருபாலாரும் கொண்டுள்ள தப்பபிப்பிராயங்கள், மூட நம்பிக்கைகள், சில மரபுகள் என்பவற்றை உதறித் தள்ளிவிட்டு என்று பெண்கள் பற்றி எல்லோரும் ஒரு புரிந்துணர்வுடன் செயற்படுகின்றனரோ அன்றுதான் பெண்ணடிமை மறையும்; வீட்டுக்கும் நாட்டுக்கும் சுபீட்சம் கிடைக்கும்.

★

## தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றுக்கு ஆங்கிலத்தில் கடமையாற்றக் கூடிய முன் அனுபவமுள்ள கணக்குப்பதிவாளர் (Accounts Clerk) Book Keeper தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 16-03-2000**

விளம்பர இல. 1013,
மே/பா உதயன்.

(74285)

# தேசிய பாதுகாப்பு...

(7 ஆம் பக்கத் தொடர்)

வில் ஏற்பட்ட அமைதி உடன்படிக்கைகள் எமக்கு நம்பிக்கை ஊட்டுவனவாக உள்ளன என்றாலும் போரின் காரணமாக உயிரிழந்த—பலியான— உயிர்கள், சீர்குலைந்த குடும்பங்கள், மானபங்கப்படுத்தப்பட்ட பெண்கள், அகதிவாழ்வில் அல்லலுறும் பெண்கள் ..இவர்களை நினைக்குபோது, அமைதியின் ஆழ்மான உணர்வுகள் எம்மைச் சூழ்ந்து விடுவது உண்மை.

இச் சிந்தனைகளுக்கு நாம் புத்துயிர் கொடுக்கப் பாடுபட வேண்டியது இன்றையதேவையாகும். காலா காலமாகக் கண்டனம் மட்டும் செய்வது போதாது. இன்று பெண்கள் அமைப்புகள் விழிப்புடன் செயல்படுவதற்கான நேரம் வந்துவிட்டது. பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகும் பெண்கள், சிறுமிகள் எண்ணிக்கைகளைத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. பட்டினியால் வாழும்குடும்பங்களுக்காக நம் மனம் கொதித்தால் மட்டும் போதாது; நாம் ஒவ்வொருவரும் இயன்ற அளவுக்குச் செயற்பட வேண்டும். அரசு செய்வதைப் பார்த்துக் கொண்டு, விமர்சித்தால் மட்டும் போதாது. நாம் நமக்குச் சொந்தமான சுயத்தைவிட்டுக் கொடுக்கவேண்டும். சமூகம் பெண்களுக்கான மேம்பாட்டு முன்மாதிரிகளையும் வாழ்க்கை முன்மாதிரிகளையும் திணிப்பதை நிறுத்தவேண்டும். இத்திணிப்புக்கள் வாழ்விற்கான உரிமைகளைத் தூக்கி எறிந்துவிடுகின்றன.

உலகமயமாதல் மூலம் நாடுகளின் தனித்துவம் பேணப்படுவதில் ஏற்படக்கூடிய ஒரு சீர்மையாக்க அபாயத்தை தவிர்த்துக் கொள்வதில் பல யுத்திகளை நாடுகள் பேண முயல்கின்றன; இதற்காக சமய, பண்பாட்டு, தேசிய கொள்கைகளிடம் அடைக்கலம் தேட முனைகின்றன.

இதனால் ஏற்படும் உட்பூசல்களை எதிர்நோக்கும் நாம், மாறிவரும் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு செயற்படுவதில் ஆர்வம் காட்டுவதுதேவையாகின்றது. மனித உரிமைகளை இப்புதிய நூற்றாண்டின் விடியலில் நடைமுறையில் செயற்படுத்த வேண்டிய சூழ்நிலையை வலுப்படுத்துவதற்கு நாம் ஆவன செய்ய முயலவேண்டும்.

மனித உரிமைகள், பெண்கள் உரிமைகளுக்கு எந்த நிறுவனமும், தனி மனிதரும் தனி உரிமை கொண்டாட முடியாது; இது பற்றிய மற்றவர்களின் தகுதிகளை நிர்ணயிக்கவும் முடியாது. மனித உரிமைகளைக் கொடுக்கவும் முடியாது. அவற்றை அரும்பாடுபட்டுப் பெற வேண்டும். நாள்தோறும் புதுப்பிக்க வேண்டும். இச் செயற்பாடுகளில் புதிய அணுகு முறையில் பெண்கள் அமைதியான வாழ்வும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

அமைதி உணர்வு ஒரு நாளில் வந்து விடுவதல்ல. அதனை ஆணை மூலம் திணிக்கவும் முடியாது. சிந்தனை, சுதந்திரம், செயல், கபடமின்மை போன்ற உறுதிப்பாடுகள் அதனை வலுப்படுத்துவனவாக அமையும். வன்முறைப் போக்கின் இழிநிலையிலிருந்து விடுபடும் நிலைக்கு வழிகாட்டியாக— போரின் கொடுரத்தைப் போக்கி அமைதி நிலவை அடைய— பெண்கள் இத்தினத்தில் உறுதியுடன் செயற்பட முனைவது அவசிய தேவையாகும்.

★

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 165 ஆவது ஜன்மதினத்தை யொட்டி

கீழ்க் காணும் பாடசாலைகளுக்கு

## நூல்கள் அன்பளிப்பு

கதைமலர், சிறுவர்களது ஸ்ரீ ராமகிருஷ்ணர், பாப்பாவுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்ற நூல்கள் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் 10—03—2000 அன்று அன்பளிப்புச் செய்யப்படும்.

- உரும்பிராய் சந்திரோதய மகாவித்தியாலயம்
- உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
- அல்வாய் அம்பாள் வித்தியாலயம்
- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
- கரவெட்டி வதிரி மகளிர் கல்லூரி

குறிப்பு: இதற்கான நிதியை திரு. நிரஞ்சன் ரவீந்திரன் அமெரிக்காவில் இருந்து அனுப்பியுள்ளார்.

--செயலாளர்.

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்,
பருத்தித்துறை

[சி/11335]

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியரான

## காங்கேயன் ஆனந்தக்குமாரசாமி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியரும்
இலங்கை வங்கி,
காங்கேசன்துறை கிளை,
மல்லாகம்.

(74281)

# சாவகச்சேரி நகர பகுதிக்கு நாளை முதல் முழுநேர மின்!

தென்மராட்சி மார்ச் 8

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளுக்கான 24 மணி நேர மின் விநியோகம் நாளை வியாழக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது.

மின் விநியோகத்துக்கெனச் சாவகச்சேரி சந்தை, பெரிய அரசடி ஆகிய இடங்களில் 100 கே. வி. மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு மின் இணைப்பு வேலைகள் மின்சாரசபையினால் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இரவு 7.00 மணி வரை ஊழியர்கள் மின் இணைப்பு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த மாதமளவில் மட்டுவில் பகுதிக்கும் 24 மணிநேர மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# புலிகள்-அரச படைகள் யுத்த நிறுத்தம் இப்போதைக்கு சாத்தியமாகமாட்டாது

கொழும்பு, மார்ச் 8

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்கான முன் முயற்சிகளை நோர்வே ஆரம்பித்துள்ளபோதிலும் இருதரப்புக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுவது இப்போதைக்குச் சாத்தியமானதாக இருக்காது.

—இவ்வாறு நோர்வே ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் உள்ள அடிப்படை முரண்பாடுகளைக் களையும் முயற்சியில் அந்தரங்கமான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அவை பூர்த்தியான பின்பே யுத்த நிறுத்தம் பற்றிய ஓர் இணக்கப்பாடு ஏற்பட முடியும் என்று அந்த இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன.

தமிழ்க்கட்சி ஒன்றின் முக்கியஸ்தர்கள் சிலர் அண்மையில் நோர்வேத் தூதாக இராஜதந்திரிகளைச் சந்தித்தபோது இவ்விவகாரம் குறித்துக் கருத்துப் பரிமாறப்பட்டது.

யுத்த நிறுத்தம் ஏற்படும் சூழ்நிலை உருவாகுவதற்கு முதலில் பல அடிப்படை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதன் பின்னர் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வேண்டிய அவசியமும் ஏற்படும்.

அவை பற்றி எல்லாம் தீர்மானிக்காமல் தற்போதைய நிலையில் அவசரப்பட்டு யுத்த நிறுத்த இணக்கத்தை ஏற்படுத்துவது பயனற்றது என நோர்வே கருதுகிறது.

தற்போது நிலவும் அரசியல் சூழ் நிலைகளிலும், புலிகளின் கோரிக்கையின் அடிப்படையிலும் பார்த்தால் ஐ. நா. சமாதான கண்காணிப்புப் படையோ அல்லது வேறு நாட்டு கண்காணிப்புப் படையோ தேவைப்படும்சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன என்று தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவர் சொன்னார்.

அரச படைகள் பழைய நிலைகளுக்குப் பின்வாங்க வேண்டும் என புலிகள் கோருவதை அரசு நிறைவேற்றுமா என்பதில் சந்தேகம் இருக்கின்றது.

தவிர முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா போன்று பலம் வாய்ந்த அரசியல் தலைமைத்துவத்தைக் கொண்டவர்கள் இப்போது தென்னிலங்கையில் இல்லை. அத்தோடு இந்தியப் படையும் இங்கு வரும் நிலையில் இல்லை; அதேநேரம் சிங்கள இனவாத சக்திகளும் வளர்ந்துவிட்டுள்ளன.

மேலும் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில்இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் இரு தரப்பினரது பரஸ்பரக் கோரிக்கைகளை எதிர்த்தரப்பு நிறைவேற்றுமா என்பதும் சந்தேகமாக உள்ளது.

இந்த நிலையில் சர்வதேச ரீதியிலான யுத்த நிறுத்தகண்காணிப்புக் குழுக்களோ, படைகளோ அவசியம் என்ற கருத்து இப்போது தமிழ்க் கட்சிகளிடம் மேலோங்கி வருகின்றது.

—இப்படி அந்தப் பத்திரிகைத் தகவல் மேலும் தெரிவித்தது. (உ-க-8)

# வேலணை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்க இணக்கம்

வேலணை,, மார்ச் 8

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதியினை ஒதுக்கித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி. கே. ஜெகன் உறுதியளித்துள்ளதாக வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யாழ். நகரில் நடைபெற்ற சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அவர் உறுதியளித்ததாகப் பிரதேசசபைத் தலைவர் தெரிவித்தார்.

அன்றைய சந்திப்பின்போது பிரதேச சபைத் தலைவரால் பின்வரும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

★ வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்து புத்தாயிரமாம் ஆண்டுக்கான புதிய கல்விச் சீர்திருத்தத்தினைச் சிறந்த முறையில் அமுல்படுத்துதல்.

★ குறிகாட்டுவான் இறங்குதுறைப் பாலத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கென சுமார் 5 இலட்சம் ரூபா ஒதுக்கித் தருதல்.

★ குறிகாட்டுவான் பிரதான வீதிப் புனரமைப்புப் பணியினை விரைவுபடுத்துதல்.

★ குறிகாட்டுவான் பிரதான வீதியில் புதிதாக பஸ் தரிப்பு நிலையங்களை அமைப்பதற்கென சுமார் 2 லட்சம் ரூபா ஒதுக்கித் தருதல்.

★ பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைப்புச் செய்தல்.

★ நயினாதீவில் இதுவரை காலமும் புனரமைப்புச் செய்யப்படாதிருக்கும் வீதிகளைப் புனரமைப்புச் செய்தல்.

★ நயினாதீவுப் பகுதிக்குள் புதிய பேருந்தினை சேவையில் ஈடுபடுத்தல்.

★ வேலணை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் இயங்கும் அரசினர் வைத்தியசாலையில் இரவு வேளையில் வைத்தியர் இல்லாப் பற்றாக்குறையினை உடன் நீக்குதல். அத்தோடு இவ்விரு வைத்தியசாலைகளுக்கும் 'அம்புலன்ஸ்' வாகன வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

★ பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேர மின்சார விநியோகத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

★ வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்திற்கான பிரதான வீதியினை எந்நேரமும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்கள் போக்குவரத்திற்கு அனுமதித்து அவ்வீதியால் பஸ் சேவையினை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ஐ-167)

# மலேரியாச் சிகிச்சைக்கு நடமாடும் தனிப்பிரிவு

திருநெல்வேலி, மார்ச் 8

யாழ். மாவட்டத்தில் மலேரியா நோய் அதிகம் தொற்றியுள்ள இடங்களுக்கு நேரடியாகச் சென்று சிகிச்சை வழங்குமுகமாக 'நடமாடும் மலேரியா நோய் சிகிச்சைப் பிரிவு' ஒன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் செயற்பட ஆரம்பித்துள்ளது. 'அம்புலன்ஸ்' வண்டி ஒன்றில் பிராந்திய மலேரியா தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சே. ரி. சிவபாதம் மேற்பார்வையில் செயற்படும் இந்த நடமாடும் சிகிச்சைப் பிரிவில் பொது சுகாதார வெளிக்கள உதவியாளர், நுண்கருவியாளர், மலத்தியன் மருந்து தெளிகருவியாளர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நடமாடும் மலேரியா சிகிச்சைப் பிரிவு கடந்த திங்களன்று மலேரியா நோயின் தாக்கம் அதிகமுள்ள இடமாகிய கொடிகாமம் பகுதியை சேர்ந்த தவசிகுளம் என்ற இடத்திற்கு நேரில் சென்று அங்குள்ளவர்களுக்கு மலேரியா நோய்க்கான இரத்தப் பரிசோதனைச் சிகிச்சை ஆகியவற்றை வழங்கியுள்ளது.

## செய்தித் துளிகள்

### மதகு திருத்தம்

சுழிபுரம், மார்ச் 8

சங்கானை வல்லை வீதியில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள மதகு திருத்தப்படுகின்றது.

இம்மதகு பல காலமாகத் திருத்தப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-28

### சந்தையில் திடீர் சோதனை!

வடமராட்சி, மார்ச் 8

பருத்தித்துறை பொதுச் சந்தை, மீன் சந்தை ஆகிய பகுதிகளில் யாழ். மாவட்ட நிறுத்தல் அளவைப் பகுதியினர் நடத்திய திடீர் வேட்டையின்போது முத்திரையிடப்படாத தராசு படிகள் கண்டு பிடிக்கப்பட்டன. முத்திரையிடப்படாத தராசு, படிகளை வைத்திருந்தோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

(ஐ-173)

### கப்பலில் வாழைக்குலை ஏற்றுமதி

கோப்பாய், மார்ச் 8

கோப்பாய் வடக்கு மத்தி விவசாய சம்மேளனம் கொழும்புக்கு வாழைக் குலைகளை 'சுமண' கப்பலில் அனுப்பியுள்ளது.

கோப்பாய்ப் பகுதி விவசாயிகளிடமிருந்து கொள்வனவுசெய்தமொத்தம் 8ஆயிரத்து 340 கிலோ நிறையுடைய வாழைக்குலைகளை சம்மேளனம் ஏற்றுமதி செய்துள்ளது. குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதை அடுத்து விவசாயிகள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர்.

(ஐ-72)

### மானிய உதவி

புன்னாலைக் கட்டுவன், மார்ச் 8

புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தில் சொந்தக் காணியில் கப்பல் வாழைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பழமானிய உதவி வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், சம்மேளனம் ஊடாக நடவடிக்கைகளைமேற்கொண்டு வருகின்றது.

கடந்த வருடமும் சொந்தக் காணியில் கப்பல் வாழைச் செய்கையில் ஈடுபட்டவிவசாயிகளுக்கு மேற்படி மானிய உதவி வழங்கப்பட்டது.

(ஐ-133)

### சிறுவருக்கு போஷாக்கு உணவு

வளலாய் மார்ச் 8

வறுமை, உணவு மேம்பாட்டு அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அச்செழு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 30 குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கப்படவுள்ளது. 'யூனிசெவ்' நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ள இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கான சிறுவரின் விவரங்களைக் கோப்பாய்ப்பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

(ஐ-178).

### தீக் காயத்துடன் பெண் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 8

குடும்பத்தகராறு காரணமாக தற்கொலை செய்யும் முயற்சியில் தனக்குதானே தீ மூட்டி எரிந்ததாகத் தெரிவித்து உடல் பூராகவும் படுகாயமடைந்த நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டையடியைச் சேர்ந்த றூபசாந்தன் கவிதா (வயது 23) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

(ஐ-15)

### வைத்திய அதிகாரி கடமையேற்பு

வேலணை, மார்ச் 8

வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகப் பணிமனையில் இயங்கும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட வைத்திய அதிகாரி செ. து. சண்முகராஜா கடந்த வாரம் தனது கடமையினைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவ் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி மெபான். சண்முகரெத்தினம் நீர்வேலி இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து கடந்த ஒரு மாதகாலத்திற்கு மேலாக இவ் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி கடமையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-167)

### மருந்துக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி, மார்ச் 8

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் நடத்தப்படும் சலரோகம், இரத்த அமுக்கம் ஆகிய கிளினிக்குகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு வழங்க மருந்துகள் இல்லாததால் தனியார் மருந்துக்கடைகளில் அவற்றினை அதிக விலை கொடுத்துவாங்க வேண்டியுள்ளதாக நோயாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரிக்குரிய இவ்வருடத்துக்கான மருந்துகள் இதுவரை வந்துசேரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

### இறுதிப் போட்டியும் பரிசளிப்பும்

சண்டிலிப்பாய், மார்ச் 8

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனை நடத்தும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் கலந்து கொள்வார். சிறப்புவிருந்தினராக வலி. வடக்கு பிரதேச செயலரும் யாழ். மாவட்ட பதில் மேலதிக அரசாங்க அதிபருமான திருமதி பத்தினியம்மா திலகநாயகம் கலந்துகொள்வார். (ஐ-135)

### பாடசாலைக்கு தண்ணீர்த் தாங்கி

தென்மராட்சி, மார்ச் 8

கொடிகாமம் வணிகர் மன்றத்தினர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்குத் தண்ணீர் தாங்கியினை அமைத்துக் கொடுத்துள்ளனர். (ஐ-117)

# மாணவர்களது நலன் கருதி வேலணையிலிருந்து காலை பஸ்

## அவர்களது ஒன்றியம் கோரிக்கை

வேலணை, மார்ச் 8

வேலணையிலிருந்து யாழ். நகரிலுள்ள கல்வி நிறுவனங்களுக்குச் சென்று கல்வி பயிலும் மாணவர் நலன் கருதி காலை 7.00 மணியளவில் யாழ். நகரைச் சென்றடையக்கூடியவாறு ஒரு பஸ்ஸைச் சேவையில் ஈடுபடுத்துமாறு வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர்ஒன்றியத்தினர்பாடசாலை அதிபர் ஊடாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர் தமது கோரிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

வேலணைப் பிரதேசத்தில் உயர்தர மாணவர்கள் அதிகமாக உள்ளனர். கல்வி கற்பதற்காக யாழ். நகரிலுள்ள கல்வி நிலையங்களுக்கு அவர்கள் செல்லவேண்டிய நிலை உள்ளது. அவ்வாறு செல்லுகின்றபோது எமது பிரதேசப் பகுதியால் செல்லுகின்ற பஸ்ஸில் சென்றால் வகுப்புகளுக்குக் குறித்த நேரத்திற்கு செல்ல முடியாதுள்ளது. எனவே குறித்த நேரத்துக்கு வகுப்புகளுக்குச் செல்வதற்காகக் காலை 7-00 மணியளவில் யாழ். நகரைச் சென்றடையத்தக்க பஸ் ஒன்றினைச் சேவையில் ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கையின் பிரதிகள் வேலணை உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினம் மற்றும் பிரதேசசபைத் தலைவர் ந. கருணாகரமூர்த்தி ஆகியோருக்கு மாணவர்களால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளன

(ஐ-167)

## நற்சிந்தனை வகுப்புகள்

கொழும்புத்துறை, மார்ச் 8

யாழ்.காங்கேசன்துறை வீதியில் உள்ள சிவதொண்டன் நிலையத்தில் கடந்த 26 ஆம் திகதி சனிக்கிழமை முதல் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 8-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணி வரையும் நற்சிந்தனை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வகுப்பில் பங்கு பற்றிப் பயன்பெற விரும்பும் மாணவ, மாணவிகள் சிவதொண்டன் நிலையத்தில் பெயர்களைப் பதிவு செய்து பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா பகுதி ஒன்று பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை ஆசிரிய மாணவர்கள் தத்தமது சிரேஷ்ட விரிவுரையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-10)

# நயினாதீவு - குறிகாட்டுவான் இடையே ஒரே ஒரு படகே சேவை; பயணிகள் பெரும் சிரமம்

வேலணை, மார்ச் 8

நயினாதீவிற்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் நாள் ஒன்றுக்கு ஒரு படகே சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு பயணிகளுடன் புறப்படும் படகு மீண்டும் புறப்பட்ட கரைக்கு வந்து சேரும் வரை பயணிகள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் பயணிகள் குறித்த நேரத்திற்குப் பயணத்தினை மேற்கொண்டு தமது கடமைகளைச் செவ்வனே செய்ய இயலாது உள்ளதோடு பல அசௌகரியங்களையும் எதிர்நோக்க வேண்டி உள்ளது.

இவ்விரு பகுதிகளுக்கான 5 படகுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-167)

## மீன்பிடித்தடை நீக்கத்துக்கு நன்றிதெரிவித்துசங்கங்கள்கடிதம்

குருநகர், மார்ச் 8

ஜனாதிபதியுடனும் மற்றும் பொறுப்பானவர்களுடனும் இராணுவ உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி மீன்பிடித்தடையை நீக்கியமைக்காக ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகமும் எம்.பி.யுமான டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.டி..பி அமைப்பின் மாவட்ட அமைப்பாளரும் எம்.பி.யுமான கே. வி. குகேந்திரன் ஆகியோருக்கு குருநகர், பாஷையூர் மீனவ மக்களின் சார்பில் குருநகர், பாஷையூர் மீனவ சங்கங்கள் நன்றி தெரிவித்துகடிதங்களை அனுப்பி வைத்துள்ளன.

மீன்பிடிக்கும் கடல் எல்லையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் இந் நன்றிக்கடிதத்தில் இச் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (இ-51)

## செயற்பாட்டறை திறந்துவைப்பு

நல்லூர், மார்ச் 8

நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாகக் கட்டப்பட்ட செயற்பாட்டறையை யாழ். வலயக் கல்விப் பணியாளர் திருமதி எஸ். மகாலிங்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைத்தார்.

பாடசாலை அதிபர் ச. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் எஸ். சிவபாலன், நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். காங்கேயன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(இ-103)

## நூல் நிலைய மண்டபம் திருத்தம்

கைதடி, மார்ச் 8

சென்ற ஆண்டுஜூன் மாதம் குண்டு வெடிப்பினால் சேதமடைந்த கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் நூல் நிலைய மண்டபம்சங்கத்தால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நூல் நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது

[க—74]


### மெக்கானிக் தேவை

டீசல் வேலை தெரிந்த மெக்கானிக்மார்கள் உடன் தேவை. சிவன் பண்ணை வீதியில் உள்ள கராஜ் தளபாடங்களுடன் கமிஷனுக்குக் கொடுக்கப்படவுள்ளது.

**சிவலிங்கம் மோட்டோஸ்.**

இல. 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(74272)


# மகளிர்தின கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்றோர்

வலிகாமம் தெற்கு, மார்ச் 8

அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மகளிர்தினக் கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் வருமாறு:-

பிரிவு 1 க. கீர்த்தனா — யூனியன் கல்லூரி, பா. கல்பனா — உடுவில் மகளிர் கல்லூரி, ஆ. சோபனா — உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.

பிரிவு 2 கி. விக்கினேஸ்வரி — மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, ச. சுகன்யா — விக்ரோரியாக் கல்லூரி, பு. தேவரஞ்சனா— சங்கானை சிவப்பிரகாச ம.வி

பிரிவு 3 வி. பிரியா — யூனியன் கல்லூரி, சி. சிவரஞ்சனி — பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, ஞ. ஜெயந்தினி — உடுவில்முருகமூர்த்தி வித்தியாசாலை.

பிரிவு 4 ச. கம்சினி—இராமநாதன் கல்லூரி, லோ. பவதாரணி — மகாஜனக்கல்லூரி, து. ஜீவானந்தன் — மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(இ-152)

## தபசு காலம் இன்று ஆரம்பம்

குருநகர், மார்ச் 8

விபூதிப் புதன் இன்றாகும். கிறிஸ்தவர்களின் தபசு காலம் இன்றுஆரம்பமாகிறது. இன்று காலை ஆலயங்களில் விசேட ஆராதனைகள் வழிபாடுகள் இடம்பெற உள்ளன.

(இ-51)

## அணித் தலைவர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 8

இலங்கை சாரணர் மன்ற யாழ். மாவட்டக் கிளைச் சங்கத்தின் சாரணர் துருப்புகளில் உள்ள அணித் தலைவர்களுக்கான "கருத்தரங்கு-2" எதிர் வரும் 11 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இதுவரை அணித் தலைவர்களாக இருந்தவர்களுக்கான இந்தக் கருத்தரங்குத் தொடரின் முதலாவது கருத்தரங்கு சென்ற மாதம் 12 ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(இ-4)


இளவாலை

### அருள்மிகு ஆனைவிழுந்தான் விநாயகர்தேவஸ்தானம் முதலாவது மஹோற்சவ விஞ்ஞாபனம்

8-3-2000 துவஜாரோகணம் (கொடியேற்றம்)
15-3-2000 புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்
17-3-2000 சப்பரத் திருவிழா
18-3-2000 தேர்த் திருவிழா
19-3-2000 தீர்த்தோற்சவம்

மஹோற்சவ குரு
சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்கள்,
தேவஸ்தான குரு

(74271) ஆலய பரிபாலன சபையினர்.


## புலி உறுப்பினர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மார்ச் 8

உமையாள் புரம் பகுதியில் கடந்த 5 ஆம் திகதி இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலின் போது எல்லைப் படை வீரரான ரகு (கந்தையா ரகுநாதன் — யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

(இ-9)


மதி ஒளி சனசமூக நிலையக் கட்டட நிதிக்காக நடத்தப்பட்ட

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு — 4245
இரண்டாம் பரிசு — 3591
மூன்றாம் பரிசு — 2730

இதற்குரிய பரிசுகளை மதி ஒளி நிர்வாகத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.

[74277] நிர்வாகத்தினர்


# 19 வறிய குடும்பங்களுக்கு புதுக்குடியிருப்பில் கடன் உதவி

வவுனியா, மார்ச் 8

அகதிகள் புனர்வாழ்வு அமைப்பினால் சுழற்சிக் கடன் நிதியாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த 19 பயனாளிகளுக்கும் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பினால் புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை பகுதியைச் சேர்ந்த 21 வறிய குடும்பங்களுக்கு இரண்டாயிரத்து 631 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களும் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. (ஐ-8)

# தென்மராட்சியில் இடம்பெயர்ந்தோருக்கு மூன்று மாத நிவாரணம் ஒரே தடவையில் கிடைக்கும்

தென்மராட்சி, மார்ச் 8

தென்மராட்சி தெற்குப் பிரதேசமான தனங்களப்பு தொடக்கம் நாவற்குழி வரையான ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்துகடந்தடிசெம்பர் மாதம் இடம்பெயர்ந்து பிரதேசத்தின் ஏனைய பகுதிகளில் தங்கியுள்ள 469 குடும்பங்களுக்கு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் ஒரே தடவையில் வழங்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதிப் பத்திரங்கள் இன்று அந்தந்தக் கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாதது குறித்து பலதரப்புக்களில் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

(ஐ-117)

## அன்பளிப்பு

வலிகாமம் தெற்கு, மார்ச் 8

ஏழாலை சைவ மகாவித்தியாலயத்தின் பாவனைக்கென இரண்டு உருக்கு அலுமாரிகள் இத்தப்பாடசாலையில் இருந்து இளைப்பாறிய இரண்டு உப அதிபர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலையின் இளைப்பாறிய உப அதிபர்களான திருமதி அ. பொன்னுச்சாமி, திருமதி இ. இராஜகோபால் ஆகியோரால் 16 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு உருக்கு அலுமாரிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(இ-152)


### கண்ணீர் அஞ்சலி

**காங்கேயன் ஆனந்தகுமாரசாமி**

(பாதுகாப்பு உத்தியோகத்தர்,
இலங்கைவங்கி, சுன்னாகம்)

எமது சக ஊழியர் கா. ஆனந்தகுமாரசாமி அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்
இலங்கை வங்கி, மானிப்பாய்.

(74270)

# யாழ். இளைஞர்களின் பிரச்சினைகள் நேற்றைய கருத்தரங்கில் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்8

இளைஞர்களுக்கான அரச கொள்கை திட்டமிடலின்போது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல், இனப் பிரச்சினைக்கு நியாயமான, நிரந்தரமான தீர்வுகாணப்படல் போன்ற விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட மாவட்ட ரீதியான இளைஞர் கொள்கை தயாரித்தல் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட இளைஞர்கள் வலியுறுத்தினர்.

யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் ஆரம்பமான இந்தக் கருத்தரங்கில் பிரதேச செயலர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் மற்றும் வங்கி அதிகாரிகள், இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

தேசிய இளைஞர் கொள்கை ஒன்றினை தயாரித்து இளைஞர் விவகார அமைச்சுக்கு அனுப்பி வைப்பதற்காக இக்கருத்தரங்கில் பலரிடம் இருந்தும் கருத்துக்கள் திரட்டப்பட்டன.

இக்கருத்தரங்கில் கருத்துத் தெரிவித்த இளைஞர்கள் பலரும் யாழ். மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்குரிய பிரச்சினைகள் பற்றி விளக்கிக்கூறினர்.

இளைஞர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

யாழ். மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்கு கருத்துச் சுதந்திரமில்லை; அவர்கள் சுதந்திரமாக ஒன்றுகூட முடியாதவாறு பாதுகாப்புக் கெடுபிடிகள் தடையாக உள்ளன.

அவர்களுக்குரிய மதிப்பு வழங்கப்படுவதில்லை; சோதனைச் சாவடிகளில் மறித்து வைத்து அவர்கள் மனம் நோகும்படி சோதனைகள் நடத்தப்படுகின்றன.

இளைஞர்கள் சுயமாக செயற்பட எந்தவித தடைகளும் இருக்கக்கூடாது. யாழ். குடாநாட்டில் அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

போர்நிறுத்தம் மேற்கொண்டு, ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டும்.

இவ்வாறு இளைஞர்களினால் வலியுறுத்தப்பட்டது. (ஐ-5)


வலிகாமம் கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவினால்

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில்

நடத்தப்படும் தொழில்நுட்பக் கற்கைநெறி - 2000

## விண்ணப்பம் கோரல்

**நெறி - விவசாய விஞ்ஞானம் - நாற்று உற்பத்தி**
**காலம் - 6 மாதங்கள்**

**விண்ணப்பப்படிவத்தை 18-03-2000க்கு முன்னர் அனுப்பிவைக்கவும். விவரங்களை பாடசாலை அலுவலகத்தில் பெறலாம்.**

(74287) *- அதிபர்*


## மகளிர் தின....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறாமைக்குக் காரணம் ஆண்களே, பெண்களே" என்னும் தலைப்பில் பட்டிமன்றம் சிறப்பு நிகழ்ச்சியாக விழாவில் இடம்பெறும். மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பும் நடைபெறும். (ஐ-3)

* * *

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழு நடத்தும் அனைத்துலக பெண்கள் தின நிகழ்வுகள் இன்று காலை 10.30 மணிக்கு தலைவர் திருமதி.ரதி சோதிலிங்கம் தலைமையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் செல்வி. உமா சிவபாதசுந்தரம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை, தென்னை வள அபிவிருத்தி) சு.கணேசமூர்த்தி, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ. கனகசபாபதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கடந்த ஆண்டு நடைபெற்ற பயிற்சிநெறிகளில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். (ஐ-10-17-135)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டிய கையேடு வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு சமூகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

சமூகவியல் சமூகத்தலைவர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-3)

# பனம்பொருள் காட்சியகம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனம்பொருள் உற்பத்திகளின் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் யாழ்நகரில் பனம்பொருள் காட்சியகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நகரின் மையப்பகுதியில் சுமார் 3லட்சம் ரூபா செலவில் இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-9)

## நியந்த்ரீ

நியந்த்ரீயின் மூன்றாவது ஆண்டு விழாவை முன்னிட்டு கீழ்வரும் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெறுவோருக்கு ஆண்டு விழாவின்போது பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

*அனைவருக்குமான*

* **சைவ சமய அறிவுப்போட்டி**
* **கோலப் போட்டி**

*சிவாச்சார்யார்களுக்கான*

* **வைதிக ஆகம அறிவுப்போட்டி**

**மேற்படி போட்டிக்கான வினாப்படிவங்களை கீழ்வரும் நிலையங்களில் ரூபா பத்து (10/-) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.**

**சைவ சமய அறிவுப்போட்டி, கோலப் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை,**

* பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
* கமலா புத்தகசாலை - பிரதான வீதி, பருத்தித்துறை
* மொடேர்ண் புத்தகசாலை - பஸ்நிலையம், நெல்லியடி
* சிவம் மெடிக்கல்ஸ் & புத்தகசாலை - சாவகச்சேரி
* வள்ளிக்குமரன் - பருத்தித்துறை, நல்லூர் ஆகிய இடங்களிலும்

**வைதிக ஆகம அறிவுப்போட்டிக்கான வினாப்படிவத்தையும் ஏனைய வினாப்படிவங்களையும்,**

* நியந்த்ரீ - சிவன்கோயில், நல்லூர்
* கலையகம் - பருத்தித்துறை - ஆவரங்கால்
* ஐங்கரன் ஸ்ரோர்ஸ் - கந்தர்மடம் ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கோலப் போட்டியின் விண்ணப்பப்படிவங்களை 15.03.2000 திகதிக்கு முன்பாகவும் ஏனைய போட்டிக்கான விடைகளை 20.03.2000 திகதிக்கு முன்பாகவும் - செயலர் - நியந்த்ரீ - சிவன்கோயில் - நல்லூர் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவேண்டும்.

**இப்போட்டிகள் தொடர்பாக நியந்த்ரீ நியமிக்கும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. போட்டிகளின் முடிவுகள் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்டு நியந்த்ரீயின் ஆண்டு விழாவின்போது பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றி பெற்றோருக்கு வழங்கப்படும்.**

சிவன்கோயில்
நல்லூர். (C/11341) செயலர், நியந்த்ரீ.

## கணனித்துறை ஆர்வலர்களுக்கான தொழில்சார் கருத்தரங்கு

தலைப்பு :- **கணனிசார் தொழில்கள்** (Computing as a Career)

வழங்குபவர்கள்:- **கலாநிதி எஸ்.கனகநாதன்** (தலைவர், கணனி விஞ்ஞானத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
**திரு. எஸ்.கண்ணன்** (விரிவுரையாளர், கணனி விஞ்ஞானத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

காலம் :- **12-03-2000 (ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி)**

இடம் :- **கணனி பயிற்சி நிலையம்,** *அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*

*ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.*

**Director**
**TRRO Computer Training Center**

(C/11337)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## பூப்புப் புனித நீராட்டுவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் மாசி மாதம் 26 ஆம் நாள் (09-03-2000) வியாழக்கிழமை பகல் 7.15 மணி முதல் 9.45 மணி வரையுள்ள மிதுன இலக்கின சுபவேளையில்,

எமது புத்திரி திருநிறை செல்வி

*** ரம்யா ***

அவர்களுக்கு பூப்புப் புனித நீராட்ட பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் சமுகம் தந்து செல்வியை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**தங்கள் நல்வரவை விரும்பும்**

காமாட்சியம்மன் கோவிலடி,
மாலுசந்தி,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

**திரு. ஏகா. கருணாகரன் (கருணா).**
**திருமதி சந்திரா கருணாகரன்.**

(74280)

(இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக பெருமிதத்துடன் ஏற்றுக்கொள்ளவும்)

## D. சேனாதிராஜா அன் சன்ஸ்

(LONDON CERTIFIED OPTOMETRIST,
M.H.D.I, கும்பகோணம் L.C.O. இலங்கை)

**மில்லேனியத்தில் எமது வாடிக்கையாளர் மற்றும் அனைத்து மக்களுக்கும் நாம் மகிழ்ச்சியுடன் அறிமுகப்படுத்தும் 25% விசேட கழிவுடனான புதிய விலைகள்**

| | |
|---|---|
| METAL FRAME WITH BIFOCAL LENSE | 1000/= |
| METAL FRAME WITH READING GLASS | 850/= |
| METAL FRAME LATEST MODEL ROUND SUN GLASS | 850/= |
| PLASTIC FRAME WITH READING GLASS | 500/= |

**இது ஒரு வியாபாரத்துக்கான யுத்தியோ விளம்பரமோ அல்ல. எமது மக்களின் கண்களுக்கு எம்மால் முடிந்து நாம் செய்யும் சேவை.**

இல.162, 1ம் குறுக்கு வீதி,
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக,
யாழ். வைத்திய நிலையம் அருகில்)
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்
*சே.ஆனந்தராஜா*

(74286)


## மரண அறிவித்தல்

### சபாபதி கணபதி

அலைதீவைப் பிறப்பிடமாகவும் ஊர்காவற்றுறை காம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி கணபதி நேற்று (07.03.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி சபாபதி தம்பதியினரின் மகனும் திருமதி சு.இராசமணி காலஞ்சென்ற கோயிலான், காலஞ்சென்ற திருமதி ச.பொன்னம்மா, பசுபதி (இளைப்பாறிய லிகிதர், கச்சேரி - மொழிபெயர்ப்பாளர், உடுவில்), மாணிக்கம் (அலைதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் க.இராசகோபால் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜீவகாருண்யம் (லிகிதர், செயலகம், வ.பி.போ.சபை), பேரின்பநாயகம் (டாக்டர், அரசாங்க வைத்தியசாலை, மக்கண்ணாகம, கண்டி), நேருஜிநேசன் (கனடா), மகேஸ்வரி, கமலகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் க.வீரவாகு, கிசத்தியானந்தம், திருமதி இ.ஜெகசோதி, திருமதி ஜீ.ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீஸ்குமார், சயந்தினி, மிதுலன், நிலாஜினி, சிவாஜினி, அம்பிகைபாலன், கேதீஸ்வரன், கணேஸ்வரன், விக்னேஸ்வரன், கரிகரன், சர்மிளி, சோபனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஊர்காவற்றுறை காம் வீதியில் நடைபெற இருக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க.ஜீவகாருண்யம் (மகன்)

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (74290)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,மார்ச் 8

யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 2.30மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் நடைபெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

* மானிப்பாய் இந்து எதிர் சாவகச்சேரி டிறிபேக்.

**18 வயதுப் பிரிவு**

* நெல்லியடி ம.ம.வித்தி. எதிர் வேலணை ம.ம.வித்தி.

(ஜ-4-86)

## விளையாட்டு விழா

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வர்த்தகபீட மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்படும் "மாக்கோஸ்" விளையாட்டு விழா இன்று ஆரம்பமாகவுள்ளது.

(உ-4)

## ஒத்திவைப்பு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் தொடர்பாக நாளை வியாழக்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி பகல் ஒரு மணிக்கு வலய அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-3)


## மிலேனியம் புலமைப்பரிசில் - 2000
## C.I.M.A, STAGE - I, STAGE - II, I.A.B, AAT.

- 100 மாணவர்களோ அதற்கு கூடுதலான மாணவர்களோ C.I.M.A, STAGE - I க்கு ரூபா 4000
- STAGE - II 100 மாணவர்களோ இணைந்தால் ரூபா 5000
- I.A.B, A. A.T வகுப்புகளில் 100 மாணவர்களோ சேர்ந்தால் குறைந்த செலவில் படிக்க முடியும்.
- INFORMATION, TECHNOLOGY சகலருக்கும் இலவசமாகக் கற்பிக்கப்படும்.
- 18-03-2000 நேர்முகப் பரீட்சை யாழ். மத்திய கல்லூரியில் 9.00 a.m - 12.30 p.m
- 19-03-2000 வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

K. விநாயகமூர்த்தி
(Executive Director S.I.A.S.)
மூனாமலை வீதி, மானிப்பாய்.
அல்லது
சனி, ஞாயிறு, யாழ். மத்திய கல்லூரியில் சந்திக்கலாம்.

(74255)


## நீங்காத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்
## 31 ஆம் நாள் ஞாபகார்த்தமும்

மலர்வு 10 - 09 - 1992



உதிர்வு 08 - 02 - 2000

### செல்வி இரவீந்திரன் இரவீந்தினி
(சிந்து)

**எம் அன்புச் செல்வமே!**
**உன் வாயால் ஒரு முறை**
**எமை அழைத்தாலும்**
**எம் துன்பங்கள் பறந்தோடிடுமே அம்மா!**
**பூவாய் மலர்ந்து மணம் பரப்புமுன்னேயே**
**நீ உதிர்ந்தது ஏனம்மா?**
**உன் இன்சொல் கேட்க**
**இறைவனே உமை அழைத்திட்டானோ?**
**தவிக்கின்றோமம்மா! துயரில்,**
**துடிக்கின்றோமம்மா! நினைவில்,**
**எம்மை நீங்காத் துயரில் ஆழ்த்திவிட்டு**
**நீ மீளாத் துயில் கொள்ளச் சென்றாயோ கண்ணே...!**

எம் அன்புச் செல்வத்தின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டும், எமக்கு நல்லாறுதல் மொழி கூறி எமது துன்பத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஸ்ரீஇராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர் மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது உள்ளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் எங்கள்செல்வத்தின் நீங்காதநினைவில் இன்று(08-03-2000) புதன்கிழமை கலந்துகொண்டு நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

**அன்புத் தாய், பேரன், மாமன்மார் குடும்பம்.**

(C/11328)

## வேட்டுக்கு இளைஞன் படுகாயம்

மண்டூர் - காக்காச்சி வெட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வயல் வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் பலத்த காயமடைந்தார்.

சுப்பிரமணியம் திருக்கேதீஸ்வரம் (வயது19) என்பவரே காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றவேளை மண்டூர்-காக்காச்சி வெட்டைப்பகுதியில் அதிரடிப் படையினர் தேடுதலில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-7-21)

### மாகாணசபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.

அனுரா கோபல்லாவ என்பவரே தாக்குதலுக்கு இலக்காகி குருநாகல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர்13 மாதங்களுக்குப் பின்னர் நேற்றைய தினமே முதல் தடவையாக மாகாணசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார் எனவும் -

வாகனம் ஒன்றில் வந்த பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர் எனவும் - ஐ.தே.கட்சி வட்டாரங்கள் குற்றஞ்சாட்டின.

(ஜ-க-7)

### புல்மோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சமர் சுமார் மூன்றுமணி நேரம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சண்டையில் புலிகளின் இரு படகுகள் முற்றாக அழிக்கப்பட்டன என்றும் வேறு இருபடகுகள் முல்லைத்தீவை நோக்கி தப்பிச் சென்றுவிட்டன என்றும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான புலிகளின் படகுகளில் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. அத்துடன் பயிற்சி முடித்த புலிகள் உறுப்பினர்களும் அதில் சென்றனர். இந்தத் தாக்குதலில் அவர்களில் 12 பேர் உயிரிழந்தனர். கடற்படையினரின் டோறா ஒன்று சிறு சேதத்துக்குள்ளானது - இப்படி பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இக்கடற்சமர் தொடர்பாக புலிகளின் தரப்பு தகவல்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஜ-3)

### வன்னியிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியிருப்புக்குச் சென்ற உறவினர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து போராட்டத்தை அவர்கள் தற்காலிகமாகக் கைவிட்டிருந்தனர்.

இது விடயமாக அரசு எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்காததை அடுத்து மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாக யுத்தக்கைதிகள் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில் -

யுத்தக்கைதிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்காததைக் கண்டிக்கும் வகையிலும் -

இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசை வற்புறுத்தவும் -

யுத்தக்கைதிகளின் உறவினர்கள் பத்துப்பேர் எதிர்வரும் சனியன்று பௌத்தலோகமாவத்தையில் உள்ள விகாரைக்குமுன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

இந்தப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளை காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம் செய்துள்ளது. (ஜ-3)


### அறிவித்தல்

'பரிஷ் மிலேனியம்' வெற்றிக்கிண்ணத்துக்காக மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு உரிய போட்டி அட்டவணைகளை (DRAWS) பங்குபற்றும் அணிகள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம்*

(C/11342)


### ஸ்ரீலங்கா அமெச்சூர் சங்கத்தின்

## மெய்வன்மைச் சட்டவிதி பரீட்சை முடிவு வெளியானது

ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் மெய்வன்மைச் சட்டவிதிகளில் தேர்ச்சிபெற்ற அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்காக அண்மையில் நடத்திய பரீட்சைக்கு யாழ். அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் ஊடாக தோற்றியவர்களின் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சையில் 42பேர் சித்தியடைந்துள்ளனர்.

சுவட்டு மத்தியஸ்தர்களாக 15 பேரும் மைதான மத்தியஸ்தர்களாக 21பேரும் நேரக்கணிப்பாளராக இருவரும் தொடக்குநர்களாக 18பேரும் சித்திபெற்றுள்ளனர்.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில் வைத்து விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க வழங்கவிருக்கின்றார்.

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் ஊடாக இந்தப் பரீட்சைக்கு தோற்றியவர்களின் பெறுபேறுகளை கஸ்தூரியார் வீதியில் 'உதயன்' அலுவலகத்துக்கு அருகில் உள்ள'அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட்' நிலையத்தில் பார்வையிடலாம் என்று சங்கத்தின் தலைவர் கப்டன் சோமசுந்தரம் தெரிவித்தார்.

சித்தியடைந்தோரின் பெயர் விவரம் உதயனில் வெளியிடப்படும்.

(ஜ-3)

### நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெறும் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்து கருத்து வெளியிடுவர் என்று அந்த அமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

நேற்று மீனவர்கள் தாக்கப்பட்ட விடயம் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து அவர் உடனடியாகக் கடற்படைத் தளபதியுடன் தொடர்புகொண்டு பேசினார். (ஜ-5)

## பெறுமதிமிக்க முத்திரைகள் எடுத்துவரப்பட்டன

யாழ். பிரதம தபாலகத்துக்கு உயர்பெறுமதியுடைய ஒரு தொகுதி முத்திரைகள் நேற்று எடுத்துவரப்பட்டன.

இன்றுமுதல் அந்த முத்திரைகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று யாழ்.பிரதம தபாலதிபர் தெரிவித்தார். வந்து சேர்ந்துள்ள முத்திரைகளில் ஆயிரம், 500 ரூபா பெறுமதியான முத்திரைகளும் அடங்கியுள்ளன. (இ-6)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் பரராசா

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பரராசா அவர்கள் நேற்று (07.03.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா - செல்லாச்சியின் அன்பு மருமகனும் அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும் கஜினபாலா (பிரான்ஸ்), றமேசினி (கனடா), றமேஸ்குமார் (கனடா), சுபாஸ்கரன் (லண்டன்), சுபாசினி (நடனம், யாழ். நுண்கலைப்பீடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சத்தியா, பத்மநாதன், சுந்தா, சிவகரன் (அகிலன்) ஆகியோரின் மாமனாரும் யதுசன், குவேரி, கஜீவன், றஜீவன், சுஜானா, சுதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2000) புதன்கிழமை 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஆனந்த வாசா'
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்.
**சிவகரன்** (அகிலன்)
(மருமகன்)

(C/11343)

### திருமதி சோமசுந்தரம் தங்கமுத்து

பலகாடு காரைநகரைப் பிறப்பிடமாகவும் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் தங்கமுத்து நேற்று (07.03.2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, தவமணிதேவி (பவா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகசுந்தரம்பிள்ளை (துணுக்காய்), முத்தையா (காலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சண்முகதாசன், சிவதாசன் (லண்டன்), சிறிதாசன், நாகராணி, சண்முகராணி, சரத்குமார், தயாநிதி, கலாநிதி, தர்சினி சண்முகதாசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுலக்ஷனாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (08.03.2000) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் பளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலகாடு,
காரைநகர்.

தகவல்:
**த.அருள்ராசசிங்கம்**
(பெறாமகன்)

(74292)

### திருமதி முத்தையா மீனாட்சிப்பிள்ளை

சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி முத்தையா மீனாட்சிப்பிள்ளை அவர்கள் நேற்று (07.03.2000) செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா (பொறியியலாளர்), நடராசா (பொறியியலாளர்) மற்றும் இரத்தினராஜா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr. பதுமநாபனின் அன்புத் தாயாரும் பவளம் (தங்க பூலோக புவனேஸ்வரி), வ.தில்லைநடராஜா (கிராமசேவையாளர், அராலி மேற்கு), வ.சற்குணநாதன் (பொறியியலாளர், அபுதாபி), வ.ஜெகதீஸ்வரன் (ஓய்வூதியர், ஜேர்மனி), சி.இரட்ணேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும் Dr. M.நந்தினி (களுபோவில வைத்தியசாலை), Dr.ப.லுகுமார், வைத்திலிங்கம், மோகன் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2000) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

S3, Charls Appartment,
34/03, De Silva Cross Road,
Halubowilla.

தகவல்:
**Dr.பதுமநாபன்**
(மகன்)

(74293)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.